விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 194 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 17 புதன்கிழமை (01.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# கொடூரமான படுகொலைகள் செய்தவர் பிள்ளையான்

## நீதிமன்றால் தண்டனை நிச்சயம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜேபால



(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கொடூரமான கொலைகள் செய்தவர். அவருக்கான தண்டனை நிச்சயம் வழங்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

ரிக்ரொக் பிரபல்யம்

## கொக்கிகுமார் சடலமாக மீட்பு



02ஆம் பக்கம் பார்க்க

## ஏழாலையில் இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு மயி

15ஆம் பக்கம் பார்க்க

## திட்டங்களை அமுலாக்குவதில் இலங்கை முன்னேற்றம்

### ஜனாதிபதியிடம் ஐ.எம்.எப் தூதுக்குழு



15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு இலங்கைக்குத் தொடரும்

### பிரதமர் ஹரிணியிடம் ஐ.எம்.எப் பிரதிநிதிகள்



02ஆம் பக்கம் பார்க்க

## தெப்பம் கவிழ்ந்ததில் 4 மாணவர்கள் உயிரிழப்பு

### புத்தளத்தில் சோகம்

(புத்தளம்)


புத்தளத்தில் தெப்பம் கவிழ்ந்ததில் 4 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் வனாத்தவில்லு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டாரநாயகபுர, மங்களபுர வில்லுப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (30) பகல் இச்சம்பவம் இடம்

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மீனவர் பிரச்சினைக்கு நிலையான தீர்வு வழங்கப்படும்

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மீனவர்களின் பிரச்சினைக்கு நிலையான தீர்வு வழங்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கடற்றொழில் இணையத்தின் பிரதிநிதிகளுடன் யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதியில் நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

## புதிய கடற்படைத் தளபதியாக பெர்னாண்டோ நியமனம்



(கொழும்பு)

இலங்கை கடற்படையின் புதிய கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோவை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

கடற்படைத் தலைமை

16ஆம் பக்கம் பார்க்க

முதலீட்டுச் சபையின்

## புதிய தலைவராக துமிந்த நியமனம்

(கொழும்பு)

இலங்கை முதலீட்டுச் சபையின் புதிய தலைவராகவும் அதன் உறுப்பினராகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் மகளிர் தினம்

### அமைச்சர் சறோஜா பங்கேற்பு



02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சர்வதேச...

சர்வதேச நாண நிதியத்தின் ஆதரவு இலங்கைக்கு என்றுமே தொடரும் என பிரதமர் ஹரிணி அமர சூரியவிடம் ஐ.எம்.எப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை மீளாய்வு செய்து நாட்டின் அடுத்தகட்ட அபிவிருத்தி முன்னுரிமைகள் குறித்துக் கலந்துரையாடவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நேற்று அலரி மாளிகையில் பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்தனர்.

குறித்த சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவை வரவேற்ற பிரதமர் கடந்த ஒன்றரை வருடங்களாக இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டதோடு எதிர்காலத்திலும் ஆக்கபூர்வமான பங்களிப்பைத் தொடர்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியிலும் நீடித்த முன்னேற்றத்தை உறுதிப்படுத்த இலங்கை தனது பயணத்தைத் தொடர்ச்சியாக மீள்நிர்ணயம் செய்ய வேண்டும் எனத் தெரிவித்த பிரதமர் வலுசக்தி, துறைமுகங்கள் மற்றும் விவசாயம் உள்ளிட்ட உலகளாவிய போக்குகளால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய துறைகள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் புற அதிர்வுகளுக்கு முகங்கொடுக்கத்தக்க வகையில் நாட்டின் பின்னடைவைத் தாங்கும் திறனைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க பொருளாதார மீட்சியைப் பாராட்டிய சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள், பணவீக்கத்தை கணிசமாகக் குறைத்தமை உள்ளிட்ட பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்றுக்கொண்டனர்.

நிச்சயமற்ற உலகப் பொருளாதாரச் சூழலால் ஏற்படும் சவால்களைப் புரிந்து கொண்ட அவர்கள், இந்தச் சவால்களை எதிர்கொள்வதில் இலங்கை தனித்து விடவில்லை என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துரைத்ததோடு நாட்டின் முன்னுரிமைகளுக்கு ஏற்ப கூட்டாண்மை மூலம் இலங்கைக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

வர்த்தக முதலீடுகளை ஈர்த்தல், சமூகப் பாதுகாப்பை பலப்படுத்துதல் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியன குறித்தும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது. (ம-7)


# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி.கௌசல்யா கிரிசாந்தன்** அவர்களின் பாசமிகு தாயார்

**அமரர். யோகநாதன் சந்திரா**

அவர்கள் 29.06.2026 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

தோற்றம் 09.03.1960 மறைவு 29.06.2026

(C-5959)


## வடக்கு...

வட மாகாண மகளிர் விவகாரம் மற்றும் சமூக சேவைகள் கூட்டுறவு அமைச்சின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் நேற்று(30) யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் அமைச்சின் செயலாளர் முத்துலிங்கம் நந்தகோபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், இந்தியத் துணைத் தூதரக அதிகாரி நாகராஜன் இராமசுவாமி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

## கொக்கி குமார்...

ரிக்ரொக் பிரபல்யம் கொக்கி குமார் பிரான்ஸ் பூங்கா ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ரிக்ரொக் சமூகவலைத்தளத்தில் கொக்கி குமார் எனப் பிரபலமான அழகேந்திரராஜா சஜித் என்ற 28 வயது இளைஞனே கடந்த 28ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் மாரடைப்பால் இறந்திருக்கலாம் என கருதப்பட்ட போதும் இவருக்கு குளிர்பானத்தில் போதைப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகித்துள்ளனர்.

இது தொடர்பாக பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பின்னரே உறுதிப்படுத்தப்படும் என பிரான்ஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் வவுனியாவைப் பூர்விகமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)


உ

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் துணை







**யாழ்ப்பாணம் வடமராட்சி பொலிகண்டி**
**மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்**

**அதிசுந்தர நூதன பஞ்சதள இராஜகோபுர**
**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2026**

**கிரியாரம்பம்**
01.07.2026 புதன்கிழமை
காலை 9.15 மணியளவில்

**விமான கலச ஸ்தாபனம்**
01.07.2026 புதன்கிழமை
மாலை 3 மணியளவில்

**இராஜகோபுரம் மஹாகும்பாபிஷேகம்**
02.07.2026 வியாழக்கிழமை
காலை 7.26 மணி முதல்
9 மணி 2 நிமிடம் வரை

**இராஜகோபுர உபயகாரர்கள்**

திரு.திருமதி.சுப்பிரமணியம் செல்லரத்தினம் குலராணி குடும்பத்தினர்
திரு.திருமதி.சண்முகராஜா வனஜா குடும்பத்தினர்

- இரவு 8.00 மணிக்கு யாழ். இசைத் துறையின் இசைச்சாரல் குரலிசை கருவி இசை சிறப்பு இசை நிகழ்ச்சி இடம்பெறும்.
- இரவு மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் திருவீதியுலா இடம்பெறும்.
- இரு தினங்களும் அன்னதானம் இடம்பெறும்.

*ஆலயப் பணியில்*
ஆலய பரிபாலன சபையினரும்
இராஜகோபுர உபயகாரர்களும்

மருதாம்புலம்,
பொலிகண்டி.

(2468)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அஸ்வெசும பட்டியலில் இருந்து 4 இலட்சம் குடும்பங்கள் நீக்கம்



**(கொழும்பு) ..........................**
**அஸ்வெசும நலன்புரிப் பயனாளிப் பட்டியலில் இருந்த சுமார் 4 இலட்சத்து 25 ஆயிரம் குடும்பங்கள், அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்படுவதாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே தெரிவித்தார்.**

2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து தற்காலிகமாக வறுமை நிலைக்குத்தள்ளப்பட்ட குடும்பங்களே இவ்வாறு பட்டியலில் இருந்து நீக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இப்பிரிவினர் "விளிம்புநிலை குழுவினர்" என வகைப்படுத்தப்பட்டிருந்தனர். கடந்த டிசம்பர் மாதமே இக்குடும்பங்களை அஸ்வெசும பட்டியலில் இருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மேலும் ஆறு மாத காலம் பட்டியலில் நீடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இக்குடும்பங்களுக்கு மாதாந்தம் சுமார் 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. அஸ்வெசும பட்டியலில் இருந்த "இடைநிலை" பிரிவைச் சேர்ந்த சுமார் 4 இலட்சம் குடும்பங்கள் ஏற்கனவே இந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

தற்போது அஸ்வெசும பட்டியலில் எஞ்சியுள்ளவை "அதி வறிய" மற்றும் "வறிய" பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 13 இலட்சம் குடும்பங்கள் மாத்திரமே என்று அமைச்சர் உபாலி பன்னிலகே சுட்டிக் காட்டினார். இதன்படி, அதி வறிய பிரிவில் 9 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்களும், வறிய பிரிவில் 4 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்களும் உள்ளனர்.

அதி வறிய குடும்பங்களுக்கு 17,500 ரூபாயும், வறிய குடும்பங்களுக்கு 10,000 ரூபாயும் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## விசேட சோதனை நடவடிக்கையில் 402 பேர் கைது

(கொழும்பு)
பொலிஸ் மா அதிபரின் நேரடி அறிவுறுத்தலுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட குற்றத் தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விசேட சோதனை நடவடிக்கைக்கு அமைய பல்வேறு குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 20 முக்கிய சந்தேகநபர்கள் உட்பட 402 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், அனைத்துப் பிராந்திய பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கியதாக வலய மட்டத்திலான பொலிஸ் விசேட சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, நேற்று முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது, குறித்த கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (நி)

# பேருந்து கட்டணத்தில் திருத்தம் அமுல்படுத்தப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)
இன்று அறிவிக்கப்படவுள்ள வருடாந்த பேருந்து கட்டணத் திருத்தத்தில், எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு வழங்கப்படாவிடின், உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பேருந்துக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு பதிலாக, எரிபொருள் விலையை குறைப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளதாக, அந்த சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இதனிடையே, வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம் தொடர்பான முன்மொழிவை போக்குவரத்து அமைச்சிடம் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பெற்றோல் விலை குறைக்கப்பட்டிருந்தாலும், தமது போக்குவரத்து கட்டணங்களை மாற்ற இயலாது என, தேசிய ஒன்றிணைந்த முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் மற்றும் தொழிற்துறை சார் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் தமது தொழிற்துறை 16 ரூபாய் என்ற அடிப்படையில் நட்டத்தில் இயங்கி வருவதாக, அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் லலித் ரோஹன பெரேரா கூறியுள்ளார். (நி)

## பிள்ளையானுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(மட்டக்களப்பு)
கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உள்ளிட்ட இருவர், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.



இதன்போது நீதிமன்றம் இருவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (நி)

# இவ் வருடம் மாகாணசபை தேர்தல் நடத்தப்பட வாய்ப்பே இல்லை.

## ஐக்கிய மக்கள் சக்தி கடும் விசனம்



(கொழும்பு)
மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி மீண்டும் கூடவுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதில் நிலவும் முட்டுக்கட்டைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"அரசு தனது முடிவை எடுப்பதற்கு மேலதிகமாக மூன்று மாத கால அவகாசம் கோரியுள்ளது. இதனால் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதில் தொடர்ச்சியான தாமதங்கள் நீடித்து வருகின்றன. இதன் காரணமாக இந்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் எவையும் காணப்படவில்லை.

பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதே எதிர்க்கட்சியின் முதன்மை முன்மொழிவாக உள்ளது.

இந்தக் கட்டமைப்புக்குள் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான கட்டாயப் பிரதிநிதித்துவத்தை அரசு கோரியுள்ளது. எவ்வாறாயினும், எதிர்க்கட்சிகள் அதனைத் தனிச் சட்ட ஏற்பாடாகக் கொண்டு வராவிட்டாலும், 25 சதவீத ஒதுக்கீட்டை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக இணக்கம் வெளியிட்டுள்ளன.

இருப்பினும், தெரிவுக் குழு தனது பணிகளைத் தொடங்கி மூன்று மாதங்கள் கடந்தும் முறையான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

இந்த மந்தகதி நிலைமையானது, இந்த ஆண்டுக்குள் தேர்தல் நடத்தப்படாது என்ற எங்களின் சந்தேகத்தை உறுதிப்படுத்துகின்றது." என அவர் தெரிவித்தார். (நி)

# எதிர்க்கட்சிகளால் எங்களை அசைக்கவே முடியாது

## அமைச்சர் நளிந்த திட்டவட்டம்

(கொழும்பு)
மக்களால் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறுவப்பட்ட எமது அரசை எதிர்க்கட்சிகளால் ஒருபோதும் அசைக்க முடியாது என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசின் தற்போதைய அரசியல் பலம் மற்றும் வேலைத்திட்டங்கள் குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடந்து முடிந்த தேர்தல்களில் இந்நாட்டு மக்கள் தங்களின் தூய்மையான அரசியல் ஆணை மூலம் இந்த அரசுக்குப் பாரிய பலத்தை வழங்கியுள்ளனர். நாட்டைப் புதிய பாதையில் கொண்டு செல்வதற்காகவே மக்கள் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை எடுத்தனர்.



மக்களின் பலத்த ஆதரவோடு இயங்கும் இந்த அதிகாரக் கட்டமைப்பை, பாராளுமன்றத்துக்குள்ளோ அல்லது அதற்கு வெளியிலோ இருந்து கொண்டு எதிர்க்கட்சிகளால் எந்த வகையிலும் பலவீனப்படுத்தவோ அல்லது அசைக்கவோ முடியாது.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அரசின் திட்டங்கள் அனைத்தும் தங்கு தடையின்றி முன்னோக்கி நகரும்." என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## 4 முறை உலக சம்பியனான ஜேர்மனி நடப்பு தொடரிலிருந்து வெளியேற்றம்

### அதிர்ச்சியில் ரசிகர்கள்



உலகக் கிண்ண கால்பந்து தொடரின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில், ஜேர்மனி மற்றும் பராகுவே அணிகளுக்கு இடையிலான போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.ஆட்டத்தின் முதல் பாதியில் 41ஆவது நிமிடத்தில் பராகுவே வீரர் ஜூலியோ என்கிசோ ஒரு கோல் அடித்து அணியை முன்னிலைப் படுத்தினார்.

இரண்டாவது பாதியின் 53 ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் காய் ஹாவர்ட்ஸ் ஒரு கோல் அடித்து சமன் செய்தார்.

இதனையடுத்து கூடுதல் நேரத்திலும் இரு அணிகளும் தலா 1 கோல் மட்டுமே எடுத்திருந்ததால், ஆட்டம் 1-1 என சமநிலையில் முடிந்தது.

இந்தநிலையில் வெற்றியாளரைத் தீர்மானிக்க நடத்தப்பட்ட பெனால்டி ஷூட்அவுட் முறையில், பராகுவே அணி 4-3 என்ற கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## சர்வதேச பட்மின்ரன் போட்டியில் யாழ். வீரர்களுக்கு வெள்ளிப்பதக்கம்




சிலோன் மாஸ்டர்ஸ் சர்வதேச பட்மின்ரன் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காண்டீபன் மற்றும் நிரோஷன் ஜூட் ஜோன் ஜோடி வெள்ளிப் பதக்கத்தை கைப் பற்றி சர்வதேச சாதனை படைத் துள்ளனர்.

சிலோன் மாஸ்டர்ஸ் சர்வதேச பட்மின்ரன் போட்டி இலங்கை ராஜரட்டை சர்வதேச உள்ளக விளையாட்டரங்கில் நடை பெற்றது.

இதில் இரட்டையர்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சற்குணமூர்த்தி காண்டீபன் மற்றும் நிரோஷன் ஜூட் ஜோன் ஜோடி வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துள்ளனர்.சர்வதேச ரீதியாக நடைபெற்ற குறித்த போட்டியில் 27 நாடுகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3)

## கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர்

## கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்திற்கு இரண்டு தங்கப் பதக்கங்கள்





(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் கலட்டி ஐக்கிய சனசமூக நிலைய விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த லகீஷன் தங்கப் பதக்கத்தையும், கரணவாய் கிழக்கு விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த நிலக்சன் வெள்ளிப் பதக்கத்தையும் கலட்டி ஐக்கிய சனசமூக நிலைய விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சுகிந்தன் வெண்கல பதகத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் கலட்டி ஐக்கிய சனசமூக நிலைய விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த லகீஷன் தங்கப் பதக்கத்தையும் அதே கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பரம்நாத் வெள்ளிப் பதக்கத்தையும் கரணவாய் கிழக்கு விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கஜானன் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

### உலக கிண்ண கால்பந்து

## நெதர்லாந்தை வீழ்த்தி மொராக்கோ வரலாற்று வெற்றி

கால்பந்து தொடரின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் நெதர்லாந்து அணியை பெனால்டி ஷூட்-அவுட் முறையில் வீழ்த்தி மொராக்கோ அணி காலிறுதிக்கு முந்தைய சுற்றிலிருந்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆட்டத்தின் 120 நிமிட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து 1-1 என சம நிலையில் இருந்தன.

நெதர்லாந்து வீரர் கோடி காக்போ கோல் அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார்.

ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் மொராக்கோவின் இஸ்ஸா டியோப் கோல் அடித்து ஆட்டத்தை சமன் செய்தார்.

விறுவிறுப்பான பெனால்டி ஷூட்-அவுட்டில், மொராக்கோ அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மொராக்கோ அணியின் நட்சத்திர வீரர் இஸ்மாயில் சைபாரி வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி பெனால்டி வாய்ப்பை கோலாக்கி மொரோக்கோவை வெற்றி பெறச் செய்தார்.

இந்த வெற்றியின் மூலம் மொராக்கோ அடுத்த சுற்றில் கனடா அணியை எதிர்கொள்ள உள்ளது.

நெதர்லாந்து அணி இந்தத் தோல்வியுடன், 2026 கால்பந்து தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்றோல் விலை குறைக்கப்பட்டாலும் முச்சக்கரவண்டி கட்டணத்தில் மாற்றமில்லை

(கொழும்பு)

பெற்றோல் விலை குறைக்கப்பட்ட போதிலும், முச்சக்கரவண்டி கட்டணங்களில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது எனத் தேசிய ஒருங்கிணைந்த முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் கைத்தொழில் முயற்சியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஒரு கிலோமீற்றருக்கு 16 ரூபாய் நட்டத்துடனேயே தமது



தொழிலை முன்னெடுத்து வருவதாக அந்தச் சங்கத்தின் பிரதம செயலாளர் லலித் ரோஹண பெரேரா தெரிவித்துள்ளார்.

எனவே முச்சக்கரவண்டி கட்டணத்தில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)





கோட்டைக்காடு-மல்லாகம்

## அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்

## இரதோற்சவம் - 2026





**01.07.2026 புதன்கிழமை**

**10 ஆம் திருவிழா**

தேர்த்திருவிழா: காலை 5.30 மணிக்கு அபிஷேகம்,
6.30 மணிக்கு பூஜை, 7.30 மணிக்கு தம்பபூஜை,
8.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை,
9.00 மணிக்கு தேரில் சுவாமி ஆரோகணம்,
12.30 மணிக்கு சண்முக அர்ச்சனை,
மாலை தேரடித் திருவிழா 6.00 மணிக்குபூஜை

**சூரனை வதம் செய்து அகங்காரத்தை இந்த உலகிலிருந்து அழித்தெறிந்த எம்பெருமான் சாளம்பை முருகனின் இரதோற்சவ வடம்பிடித்து அவனருளைப் பெற்றுய்வீர்களாக.**

(C-5956)

**தேர் திருவிழா உபயகாரர்**


# இராசிபலன்

01.07.2026
ஆனி 17, புதன்கிழமை
பிரதமை முற்பகல் 7.44 மணிவரை

பூராடம் காலை 7.26 மணிவரை
சுப நேரம் 4.26-5.56 மணிவரை
இராகுகாலம் 11.56-1.26 மணிவரை

சந்திராஷ்டமம்: திருவாதிரை

**வளவன்**

**மேஷம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**ரிஷபம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றமுண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும்,

**மிதுனம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**கடகம்** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் கௌரவம் கூடும்.

**சிம்மம்** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**விருச்சிகம்** உறவினர்கள் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உற்சாகமான நாள்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், போசன சுகமுண்டு.

**மகரம்** வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டமுண்டு, பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** சிறிய வேலையொன்றுக்காக பல முறை அலைய நேரிடலாம், மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**பழிவாங்குவதில் கருத்துள்ளவன் பிறர் தந்த புண்ணை ஆறவிடுவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "சிரஞ்சீவி" இதழ் வெளிவந்து விட்டது




(யாழ்ப்பாணம்)

யாழ். ஊரெழு பூரண நிலையத்தின் "சிரஞ்சீவி" காலாண்டிதழ் வெளிவந்து விட்டது. இவ் இதழில் தற்சார்பும் தன்னுரிமையும் ஒரு புதிய சமூக கட்டமைப்பு, மதிப் பெண்கள் அல்ல மகுடங்கள், இலங்கையின் கல்வி வரலாறு, அரசியல் சதுரங்கத்தில் புதிய ராஜா, போற போக்கில் இந்தப் பக்கம், டெங்கு விழிப்புணர்வே முதல் கவசம், ராஜ். ராஜரட்ணத்தின் சமனற்ற நீதி, பன்மைத்துவ இலங்கையின் பாரம்பரிய சட்டங்கள் உள்ளிட்ட பல ஆக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (8)

# மதில்களுக்கு வெளியே காணப்படுகின்ற வேலிகளை அகற்றுங்கள்!

## சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் பலர் புதிதாக மதில்களை அமைத்துள்ள போதிலும், அந்த மதில்களுக்கு முன்னால் உள்ள வேலிகளை அகற்ற பின்னடிப்பதாக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தற்போது பலரும் அழகுக்காக மதில்களை அமைக்கின்றனர். அந்த மதில்கள் அனுமதி பெற்று அமைக்கப்படுகின்றதா அல்லது அனுமதி பெறப்படாமல் அமைக்கப்படுகின்றதா என்பதற்கு அப்பால், அவ்வாறு மதில்களை அமைக்கும் பலரும் அந்த மதில்களுக்கு வெளியே ஏற்கனவே இருந்த வேலிகளை அகற்ற பின்னடிக்கிறார்கள்.

மதில்களை அமைத்த பின்னர் அந்த வேலி எதற்கு?

இவ்வாறு மதில்களுக்கு வெளியே காணப்படுகின்ற வேலிகள், தகரங்கள் போன்றவை போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தி வருகின்றன.

எனவே, இவ்வாறு மதில்களுக்கு வெளியே காணப்படுகின்ற வேலிகளை குடியிருப்பாளர்கள் உடனடியாக அகற்ற வேண்டும்.

அத்துடன், சாவகச்சேரி நகர சபை பல வீதிகளை புனரமைக்க தீர்மானித்திருக்கின்றது. அவ்வாறு தீர்மானித்துள்ள வீதிகள் அல்லது ஒழுங்கைகள் குறைந்தது 14 அடி அகலம் உடையதாக இருக்க வேண்டும். வீதிகளை ஒடுக்கமாக போட முடியாது.

அது எதிர் காலத்தில் பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்தும்.

எனவே, அந்த ஒழுங்கைகளில் இருக்கின்ற குடியிருப்பாளர்கள் தமது வேலிகளை உள்நோக்கி நகர்த்தி; வீதியை புனரமைக்க ஒத்துழைப்புத் தர வேண்டும் எனத் தெரிவித்தார். (8-30)

# சாளம்பை முருகனுக்கு இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

மல்லாகம்- கோட்டைக் காடு சாளம்பை முருக மூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இந் நிலையில் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (8)


# ஜனன தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்தி சங்கம் நடத்தும் இந்து போர்ட் சு. இராசரத்தினம் அவர்களின் 142 ஆவது பிறந்தநாள் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்க ஆராதன மண்டபத்தில் நடைபெறும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் கே. எஸ்.சத்தியேந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி பிரதி அதிபர் மே.இந்திரபாலா கலந்து கொள்ளவுள்ளார். (8)

# நெடுங்கேணி– ஒலுமடு பகுதியில் மக்கள் குறைகேள் சந்திப்பை நடத்திய ரவிகரன் எம். பி



(வவுனியா)

வவுனியா வடக்கு - நெடுங்கேணி, ஒலுமடுப் பகுதியில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று முன்தினம் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடாத்தியுள்ளார். இச்சந்திப்பில் கிராமத்தின் அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் தொடர்பில் ரவிகரன் எம்பிக்கு மக்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஒலுமடு வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கிவுல் ஓயா ஆக்கிரமிப்பு தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப் பட்டது.

மேலும் "டித்வா" பேரிடரின் போது ஏற்பட்ட நெற் செய்கை அழிவுகளுக்கான இழப்பீடுகள் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் மக்களால் முறையீடு செய்யப் பட்டதுடன், நயினாமடு ஸ்ரீ ஆதி ஞான வைரவர் ஆலயத்தின் சீரமைப்புப் பணிகள் தொடர்பிலும் இதன் போது பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (8)

# வடமராட்சியில் காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினரால் காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கும் அவர்களைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட சங்கங்களுக்கும் மொத்தமாக 7 இலட்சத்து 50ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 28 ஆம் திகதியன்று வடமராட்சிக் கடலில் கர்ணாமல் போன 4 மீனவர்கனைத் தேடும் பணியில் முனை மற்றும் கற்கோவளம் கடற் றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் பல நாட்காளாக தங்களது படகுகளில் அதிகளவு எரி பொருளைச் செலவளித்து ஈடுபட்டிருந்தனர்.

எனினும் காணாமல் போன மீனவர்கள் தொடர்பில் எந்த தகவலும்இதுவரை கிடைக்கவில்லை.

அதிகளவு தேடுதல் நடவடிக்கையின் போது ஏற்பட்ட அதிகளவு எரிபொருள் செலவுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கும் வகையிலும் காணமால்போன மீனவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (8-60)

# பச்சிலைப்பள்ளி பண்பாட்டு விழா

(பச்சிலைப்பள்ளி)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் நிதி அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் "பண்பாட்டுவிழா" இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் கலந்து கொள்ளவுள்ளார். (8)

# சித்திரவதைக்குள்ளான பசு நெல்லியடியில் மீட்பு

(கரணவாய்)

வளர்ப்பு பசுமாடு ஒன்று விஷ மிகளால் கடத்தப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக் கப்பட்ட நிலையில் நெல்லியடிப் பொலிஸாரால் மீட்கப்பட்டு நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தற்போது குறித்த பசுமாடு கட்டப்பட்டுள்ளது.

உரிமையாளர்கள் ஆதாரத்துடன் குறித்த கால்நடையை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-60)



# மானிப்பாய் இந்துவின் நாடகவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த நாடக விழா 2026 இன்று புதன்கிழமை மற்றும் நாளை வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களும் மாலை 6 மணிக்கு கல்லூரியின் துரைராஜா திறந்த வெளி அரங்கில் கல்லூரி அதிபர் துரைரட்ணம் திலீப் குமர்ர் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கக் கலைகளும் துறைத் தலைவர் கலாநிதி நவதர்சினி கருணாகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் நாடக ஆற்றுகைகளாக முதலாம் நாள் மாணிக்கர் இல்ல ஆற்றுகை, சுந்தரர் இல்ல ஆற்றுகை, ஆசிரியர்களின் நாடக ஆற்றுகை, இரண்டாம் நாள் ச்ம்பந்தர் இல்ல ஆற்றுகை, வாகீசர் இல்ல ஆற்றுகை, பழைய மாணவர்களின் ஆற்றுகை என்பன இடம்பெறவுள்ளன. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கைக்கான பயணத்தை நிறைவு செய்த ஐ.எம்.எப் பணியாளர்கள்

(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம்மேற் கொண்டிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்கள் நேற்று நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையை ஆய்வு செய்வதற்கும், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியுதவி வசதியின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் பொருளாதார சீர்திருத்தங்களின் முன்னேற்றம் குறித்து விவாதிப்பதற்கும் ஜூன் 24 அன்று நாட்டிற்கு வருகை தந்தனர்.

மத்திய கிழக்கில் போர்ச் சூழல் நிலவி வந்தபோதிலும், இலங்கை அதிகாரிகள் மேற்கொண்ட விரைவான நடவடிக்கைகள், அந்நாடு தனது பொருளாதார மற்றும் சமூக நிலைத்தன்மையைப் பேணிக் கொள்ள உதவியுள்ளன என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைத் தலைவர் இவான் பாபஜார்ஜியோ இந்தக் கலந்துரையாடலின்போது தெரிவித்துள்ளார்.

நாட்டில் செயற்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தத் திட்டம், இதுபோன்ற நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தேவையான வலிமையை வழங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தலைநகர் வன்னி துடுப்பாட்ட தொடர் ஸ்பென்ஸ் கழகம் வெற்றி வாகை

(தர்மபுரம்)

முதற்தடவையாக கிளிநொச்சி தர்மபுரம் இளந்தாரகை விளையாட்டுக்கழகம் மற்றும் திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழகம் மோதும் தலைநகர் வன்னி துடுப்பாட்ட தொடர் நேற்று முன்தினம் தர்மபுரம் இளந்தாரகை விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட குறித்த தொடரில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழகம் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படிமுதலில் துடுப்பெடுத்தாடிய தர்மபுரம் இளந்தாரகை விளையாட்டுக்கழகம் 33.5 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 165 ஓட்டங்களை பெற்றது.

166 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழகம் 33.5 பந்து பரிமாற்றங்களில் 5இலக்குகளை இழந்த நிலையில் 168 ஓட்டங்களைப் பெற்றுவெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழக வீரர் எம்.நிஃபான் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த பந்து வீச்சாளராக திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழக வீரர் ஆர். கஜேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த களத்தடுப்பாளராக திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழக வீரர் கே.பானுசாந்தும் தெரிவு செய்யப்பட்டனர். (3-316)

## இலங்கை நிர்வாக சேவைக்கு

# 150 புதிய அதிகாரிகள் விரைவில் நியமனம்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையில் 150 பேரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள் ளது.

இதனடிப்படையில், இந்த நியமனங்களுக்கான போட்டிப் பரீட்சையொன்றை விரைவாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைக்கு இலங்கை நிர்வாக சேவையில் அதிக எண்ணிக்கையிலான காலிப் பணியிடங்கள் உள்ளன.

அதன் காரணமாக அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்கள் உள்ளிட்ட அலுவலக செயற்பாடுகளில் பெரும் தடங்கல் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், தற்போதைக்கு இலங்கை நிர்வாக சேவையில் வெற்றிடமாக உள்ள பணியிடங்களுக்கு உரிய நியமனங்கள் செய்யப்படவுள்ளன.

அந்தவகையில், இலங்கை நிர்வாக சேவையில் உதவிச் செயலாளர் பதவிக்கு 150 புதிய அதிகாரிகளை விரைவில் நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார். (நி)

# டெங்கு பரவலை கண்டறிய களமிறக்கப்பட்ட ட்ரோன்கள்

(கொழும்பு)

டெங்கு நுளம்புகள் இனப் பெருக்கம் செய்யும் இடங்களைக் கண்டறிந்து அழிப்பதற்காக, ஸ்ரீலங்கா இராணுவத்தின் ட்ரோன்கள் களமிறக்கப்பட்டுள்ளன.

டெங்கு வைரஸைப் பரப்பும் நுளம்புகளின் வாழ்விடங்களைக் கண்டுபிடித்து அவற்றைக் கட்டுப்படுத்த ஸ்ரீலங்கா இராணுவத்தின் கருவிகளைப் பயன்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட, நாடு தழுவிய மூன்று நாள் டெங்கு தடுப்புப் பரப்புரையின் ஒரு பகுதியாகவே இந்த ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன. (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில். (C-5928)

074 196 4945, 076 682 7368

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127



## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி.கண்ணகி தயாசீலன் அவர்களின் அன்பு மாமியார்

அமரர்

நன்னித்தம்பி முத்துப்பிள்ளை

(பாலம்மா)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

தோற்றம்:08.06.1933

மறைவு:28.06.2026

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகம். (C-5955)



## CORRECTION OF INVITATION FOR BIDS 2026/04 PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

This is reference to the above matter; there is a correction on **INVITATION FOR BIDS 2026/04** which is published on 27.06.2026 by Puthukkudiyiruppu Pradeshiya Sabha (Valampurii News Paper Page No 05). The Required CIDA Grade & Specialty is change as C9, C8 & C7 Building.

Chairman
Divisional Procurement Committee,
Puthukkudiyiruppu Pradeshiya Sabha. 01.07.2026 (C-5928)



## பகிரங்க ஏல அறிவித்தல் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை-2026

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தற்போது கட்டட வேலைக்கான மணலை பெற்றுக் கொள்வதில் நிலவி வருகின்ற நெருக்கடியினை கருத்திற்கொண்டு சலுகை அடிப்படையில் மணல் விநியோகத்தினை மேற்கொள்வதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் தமது வீட்டு நிர்மாணங்களுக்கான மணலினை பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் ஏனைய தேவையுடையவர்களும் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை மக்களின் நலன்கருதி பகிரங்க ஏலம் மூலம் மணல் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஏலம் கோரப்படும் திகதி- 07.07.2026 செவ்வாய்க்கிழமை
நேரம் - காலை 10.30 மணி
இடம் - பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தலைமை அலுவலகம்

நிபந்தனைகள்

1. பகிரங்க ஏலத்தில் பங்கெடுப்பவர்கள் உரிய விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்தி மீளளிக்க முடியாத பாதுகாப்பு வைப்புத் தொகையாக ரூபா ஐயாயிரம் (5000.00) இனை அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு முன்னர் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
2. தெரிவு செய்யப்படும் ஏலதாரர் சபையினால் குறித்தொதுக்கப்படும் காலத்தினுள் மணலை அகற்றுதல் வேண்டும்.
3. அனுமதிக்கப்படும் மணலின் பெறுமதியில் மூன்றில் ஒரு பகுதியினை அன்றைய தினமே முற்பணமாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். முற்பணம் செலுத்தப்படுமிடத்தேயே மணல் எடுத்துச் செல்லப்படும் வழித்தட அனுமதி வழங்கப்படும்.

சுப்ரமணியம் சுரேன், தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை. (C-5957)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## அமெரிக்காவின் புதிய பாஸ்போர்ட்டை அறிமுகப்படுத்தினார் ட்ரம்ப்




(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது சொந்தப் படம் மற்றும் கையெழுத்துடன் கூடிய புதிய சிறப்புப் பதிப்பு பாஸ்போர்ட்டை அறிமுகப்படுத்தியுள்ளார்.

சமூக வலைத்தள பக்கத்தில் இந்த பாஸ்போர்ட்டின் மாதிரிப் படத்தை அவர் பகிர்ந்துள்ளார்.

அமெரிக்க வரலாற்றிலேயே பதவியில் இருக்கும் ஒரு ஜனாதிபதியின் படம் அதிகாரப்பூர்வ பயண ஆவணத்தில் இடம்பெறுவது இதுவே முதல் முறையாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அமெரிக்க சுதந்திரப் பிரகடன உரையின் பின்னணியில், ஜனாதிபதி ட்ரம்ப் தனது மேசையில் சாய்வாக நிற்பது போன்ற ஒரு புகைப்படம் இடம் பெற்றுள்ளது. அதன் கீழே அவரது கையெழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளது.

அடுத்த பக்கத்தில் ஜான் டம்பல் வரைந்த புகழ் பெற்ற "சுதந்திரப் பிரகடனம்" ஓவியமும், அதனுடன் ஒருங்கிணைந்த அமெரிக்க 250 வாசகமும் அச்சிடப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகை, இந்த சிறப்புப் பதிப்பு பாஸ்போர்ட்டிற்கு "தேசபக்தர் பாஸ்போர்ட்" என்று பெயரிட்டுள்ளது.

அமெரிக்கா சுதந்திரம் அடைந்து 250 ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடும் வகையில் இந்த சிறப்புப் பதிப்பு பாஸ்போர்ட் வெளியிடப்படுகிறது. (3)

# அமெரிக்காவுடன் எந்த

# ஈரான் திட்டவட்ட

(டெஹ்ரான்)

**அமெரிக்காவுடன் எந்த சந்திப்பும் நடத்தப் போவதில்லை என ஈரான் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

மத்திய கிழக்கில் போரை முடிவுக்குக் கொண்டு வரும் ஒப்பந்தத்தை செயற்படுத்த அமெரிக்கா - ஈரான் அதிகாரிகள் சந்திப்பு நடத்த விருப்பதாகச் செய்திகள் வெளியான நிலையில் அதனை ஈரான் மறுத்துள்ளது.

சமீப நாட்களில் இரு நாடுகளும் பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வந்த நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குள்ளானது.



## கரூர் செல்லுப்

(சென்னை)

இந்தியாவின் கரூரில் தமிழக வெற்றிக்கழகத்தின் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி, உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரையும் சந்திப்பதற்காக முதலமைச்சர் விஜய் கரூர் செல்லவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

செ
பிரச
41
ப
அ
உள்
சந்
ஆற

## சீனாவின் பிரபல தொழிலதிபருக்கு அமெரிக்காவில் 30 ஆண்டுகள் சிறை




(பீஜிங்)

சீனாவின் பெரும் பணக்காரர்களில் ஒருவராகக் கருதப்பட்ட பிரபல தொழிலதிபர் குவோ வெங்குய் இற்கு பில்லியன் டொலர் நிதி மோசடி குற்றச்சாட்டின் கீழ் அமெரிக்க நீதிமன்றத்தினால் 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் முன்னணி தொழிலதிபராக இருந்த குவோ வெங்குய் கடந்த 2017 ஆம் ஆண்டு சீனாவிலிருந்து தப்பி அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தார். அங்கு தன்னை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர விமர்சகராக வெளிப்படுத்திக் கொண்ட அவர் சமூக ஊடகங்கள் ஊடாக பெருமளவிலான ஆதரவாளர்களைத் தன்வசப்படுத்தினார்.

சட்டவிரோத பணப் பரிமாற்றம் மோசடி மற்றும் அச்சுறுத்தி பணம் பறித்தல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் அவர் அமெரிக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டார்.

இவ்விடயம் தொடர்பான வழக்கை விசாரித்த நியூயோர்க் நீதிமன்ற நீதிபதி அனலிசா டோரஸ் 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை தீர்ப்பளித்து சீனாவில் ஜனநாயகத்தைக் கொண்டுவர விரும்பிய அப்பாவிகளை குறிவைத்து குவோ வெங்குய் இந்த பாரிய நிதி மோசடியை நடத்தியுள்ளார் என கடுமையான கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார். (8)

## வெனிசுலா நிலநடு

# நான்கு நாட்களில்

## தந்தையும் மகனும் உ



(காரகஸ்)

வெனிசுலாவில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் 4 நாட்களுக்குப் பின்னர் லா குய்ரா நகரில் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த தந்தையும், மகனும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பிரான்ஸ் மற்றும் அமெரிக்க மீட்புப் படையினர் இணைந்து, பிரத்தியேக கேமராக்கள் மற்றும் சிறப்பு உபகரணங்களைப் பயன்படுத்தி இவர்களைக் கண்டறிந்துள்ள நிலையில் சுமார் 12 மணி நேரப் போராட்டத்திற்குப் பின் அவர்கள் இருவரையும் பத்திரமாக வெளியே எடுத்துள்ளனர்.

மேலும், நீண்ட நாட்கள் அவர்கள் இடிபாடுகளுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

## ...தச் சந்திப்பும் இல்லை

## ...டமாக அறிவிப்பு!



“தொழில்நுட்ப ரீதியான எந்தச் சந்திப்பையும் இந்த வாரம் நடத்தப்போவ தில்லை” என அவர் ஈரான் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஹார்முஸ் நீரிணை தொடர்பாக கட்டாரில் பேச்சுவார்த்தை நடத்த ஈரானும் அமெரிக்காவும் முடிவு செய்ததாக அமெரிக்க செய்தி நிறுவனம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

இதனைத் தொடர்ந்து, இரு நாடுகளும் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த விருப்பதாக வெளியான செய்திகளை ஈரான் துணை வெளியுறவுத் துறை அமைச்சர் காசிம் கரிபாபாடி மறுத்துள்ளார்.

## ...ும் முதலமைச்சர் விஜய்

முன்னதாக கடந்த வருடம் செப்டம்பரில் நடைபெற்ற, பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களை அழைத்து, மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் சந்தித்து முதலமைச்சர் விஜய் ஆறுதல் கூறினார்.

மேலும் சட்டமன்ற தேர்தலுக்கு பின்னர் நேரில் வந்து, பாதிக்கப்பட்டவர்களை சந்திப்பதாக, உறுதியளித்திருந்தார்.

தற்போது, சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று, த.வெ.க. ஆட்சி அமைத்துள்ளது.

ஆட்சி பொறுப்பேற்று ஒன்றரை மாதங்களுக்கு மேலாகியும், முதல்வர் விஜய் அங்கு செல்லவில்லை என எதிர்க்கட்சிகள் விமர்சித்து வந்தனர்.

இந்தநிலையில், முதல்வர் விஜய், எதிர்வரும் 10 ஆம் 11ஆம் திகதிகளில், கரூர் செல்ல திட்டமிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


மேலும் அங்கு நடைபெறும் அரச நிகழ்வில் பங்கேற்று, நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (3)

### ஐரோப்பாவை உலுக்கும் கடும் வெப்பம்

## மெழுகு போல் உருகும் போக்குவரத்து சமிக்ஞைகள்

(பாரிஸ்)

ஐரோப்பாவில் நிலவும் அசுர வெப்ப அலை காரணமாக சாலையில் போக்குவரத்து விளக்குகள் உருகும் காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றது.



பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் முறையே 43 பாகை செல்சியஸ் மற்றும் 47 பாகை செல்சி யஸ் வெப்பநிலை ஆகியவற்றால் நிலைகுலைந்து வரும் நிலையில், ஐரோப்பாவின் பிற வல்லரசு நாடுகளான இத்தாலி மற்றும் ஜேர்மனி யையும் இந்த அசுர வெப்ப அலையால் தற்போது முற்றிலுமாக முடக்கியுள்ளன.

பொதுமக்களைத் தாண்டி, தற்போது நகரின் முக்கியச்சாலைகளில் உள்ள உள்கட்டமைப்புகளே இந்த வெயிலின் தாக்கத்தால் உருகத் தொடங்கியிருப்பது ஒட்டுமொத்த ஐரோப்பாவையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஐரோப்பியக் கண்டத்தின் பல பிராந்தியங்களில் கோடை வெப்ப நிலையானது முன்னெப்போதும் இல்லாத வகையில் 40 பாகை செல்சியஸ் முதல் 45பாகை செல்சியஸ் வரை எட்டி, அனல் காற்றாக வீசி வருகின்றது.

இத்தாலி மற்றும் ஜேர்மனியின் முக்கிய நகரங்களில் உள்ள நவீனப் போக்குவரத்து விளக்குகள் , இந்த நீடித்த அதீத வெப்பத்தின் காரணமாக ஏற்பட்ட கடுமையான அழுத்தத்தைத் தாங்க முடியாமல் உருகத் தொடங்கியுள்ளன.

வெப்பத்தால் சிக்னல் கம்பங்களின் பிளாஸ்டிக் மற்றும் ஃபைபர் பாகங்கள் உருகி, சிக்னல் விளக்குகள் தங்களின் கட்டமைப்பை இழந்து, நடுச்சாலையிலேயே உருகிச் சரிந்து விழத் தொடங்கியுள்ளன. இதனால் பல முக்கியச் சந்திகளில் போக்குவரத்து முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (3)

### ...நடுக்கம்

## ...ின் பின்னர் உயிருடன் மீட்பு

இருந்ததால், இருவரும் கடும் நீர்ச்சத்து குறைபாட்டுடன். சோர்வாகக் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில், தற்போது அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கு முன்பு இதேபோல இடிபாடுகளில் இருந்து ஒரு தாயும், அவரது குழந்தையும் உயிருடன் மீட்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.இந்த மீட்புச் சம்பவங்கள் அங்கு தொடர்ந்து நடைபெறும் சர்வதேச மீட்புப் பணிகளில் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. இதேவேளை, நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,500 ஐ நெருங்கியுள்ளது. (3)


## உக்ரைனின் தொடர் தாக்குதல்களால் ரஷ்யாவில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு

(கீவ்)

உக்ரைன் படைகள் நடத்திய தொடர் வான் வழித் தாக்குதல்களால் ரஷ்யா மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைனின் கிரிமியா பகுதியில் தொடங்கிய இந்த தட்டுப்பாடு, தற்போது ரஷ்யாவின் தெற்குப் பகுதிகள் மற்றும் தலைநகர் மொஸ்கோ வரை தீவிரமாகப் பரவியுள்ளது.

உக்ரைனின் ட்ரோன் தாக்குதல்கள் காரணமாக



முக்கிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், ரஷ்யாவின் பெரும்பாலான பகுதிகளில் வாகன சாரதிகளுக்கு எரிபொருள் வழங்குவதில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர்களுடன் நடத்திய அவசரக் கூட்டத்தில், உக்ரைனின் ட்ரோன் தாக்குதல்களால் சில பிராந்தியங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொண்டார்.

எனினும், நிலைமையைச் சமாளிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் உறுதியளித்துள்ளார்.

இந்த எரிபொருள் தட்டுப்பாடு ரஷ்யாவின் அன்றாடப் போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலியைப் பெரிதும் முடக்கியுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தலைவர் கிண்ண உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள் இன்று

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதை பந்தாட்ட போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை மாலை இடம்பெற உள்ளது.

கொலின்ஸ்-வல்வை, ரேஞ்சர்ஸ்-ஐக்கிய விளையாட்டு கழகம் என்பன இன்றைய அரையிறுதி ஆட்டங்களில் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

குறித்த போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரை இறுதி ஆட்டதில் குழு ஒன்றில் முதலிடம் பெற்ற கொலின்ஸ் அணியுடன் வல்வை அணியும், இன்று மாலை 5 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் குழு இரண்டில் முதலிடம் பெற்ற ரேஞ்சர்ஸ் அணியுடன் ஐக்கிய விளையாட்டு கழகமும் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

இவ் ஆட்டங்களில் வெற்றி பெறும் அணிகள் தலைவர் கிண்ண இறுதி போட்டிக்குத் தகுதிபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-60)



யாழ்ப்பாணம் ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா-2026 ஏழாலை புனித இசிதோர் தேவாலய வளாகத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா. |
| கத்தரிக்காய் | 250 | 180 | 200 | 150 | 200 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | -- | 240 | -- | 340 |
| பச்சைமிளகாய் | 600 | 550 | 800 | 550 | 800 | 500 | 800 |
| தக்காளி | 750 | 700 | 700 | 620 | 600 | 700 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 240 | 200 | 160 |
| கோவா | 250 | 250 | 300 | 250 | 250 | 220 | 200 |
| கரட் | 400 | 400 | 450 | 380 | 450 | 450 | 350 |
| பூசணி | 130 | 140 | 150 | 100 | 160 | 120 | 120 |
| புடோல் | 200 | 160 | 200 | 200 | 250 | 150 | 300 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 120 | 200 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 300 | 400 | 400 | -- | 330 |
| பெரிய வெங்காயம் | 220 | 240 | 200 | -- | 200 | -- | -- |
| பாகற்காய் | 1200 | 1600 | 1500 | 1800 | 1500 | 1200 | -- |
| வெண்டக்காய் | 200 | 250 | 150 | 250 | 400 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 320 | 300 | 400 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 600 | 250 | 400 | 350 | 250 | 300 | 275 |
| லீக்ஸ் | 400 | 400 | 500 | 350 | 400 | 400 | 350 |
| பீற்றூட் | 350 | 450 | 600 | 400 | 500 | 400 | 450 |
| கறிமிளகாய் | 400 | 500 | 500 | 500 | 400 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 500 | 350 | 400 | 400 | 680 |
| போஞ்சி | 450 | 550 | 600 | 600 | 500 | 450 | 480 |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | 200 | -- | 180 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 70 | 150 | 80 | 60 | -- | 60 |
| தேசிக்காய் | 450 | 400 | 500 | 350 | 500 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 150 | 110 | 100-140 | -- | 100 |
| இராசவள்ளி | 400 | 400 | 500 | 350 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 420 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 180 | 200 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 80 | 70 | 100 | -- | 120 | -- | 45 |
| ஈரப்பலா | -- | -- | 150 | -- | 250 | -- | -- |

## இன்று ஒரு தகவல் 605

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



### நம் வாழ்க்கை நம் கையில்

பஞ்ச பாண்டவர்கள் ஐந்து பேர்.

அதிலே மூத்தவர் தருமர். ஒரு நாள் அவர் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்திருந்தாராம். அப்போது தெருவிலே பிச்சைக்காரன் வந்திருக்கான். இவர் முன்னால் வந்து நின்று பிச்சை கேட்டான். அந்த சமயத்திலே தருமர் ஏதோ வேலையாக இருந்திருக்கார். அதனாலே "நாளைக்கு வா" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்து விட்டார். அவனும் சரி என்று சொல்லி விட்டு போயிட்டான்.

பீமன் இதைப் பார்த்து கொண்டிருந்தான்.

உடனே என்ன செய்தான் தெரியுமா? ஒரு முரசை எடுத்துக் கொண்டு கிராமத்தை நோக்கி ஓடினான். முரசு அடித்துக் கொண்டு ஏதோ சொல்ல ஆரம்பித்தான். தருமருக்கும் இது தெரிஞ்சுது.. "என்ன ஆச்சு உனக்கு" என்று கேட்டார்.

அதுக்குப் பீமன் சொன்னார், நான் கிராம மக்களுக்கு "என். அண்ணன் காலத்தை வென்றுவிட்டார் என்று சொல்லிவிடப் போறேன் என்றான்.

"ஏன் அப்படி சொல்லப் போகிறாய் என்றான்.

நீங்க பிச்சைக்காரனை நாளைக்கு வரச் சொன்னீங்களே. நீங்க நிச்சயமா நாளைக்கு இருப்பீங்களா? அந்தப் பிச்சைக்காரனும் நாளைக்கு உயிரோடு இருப்பானா? நாளைக்கு நீங்க இருந்தாலும் பிச்சை போடும் மனோபாவம் உங்களுக்கு இருக்குமா? பிச்சை நிச்சயம் போடுவீங்களா நாளை வரை அவன் பிச்சைக்காரனாவே இருப்பான் என்கிறது நிச்சயமா? நாளைக்கு உங்கள் சந்திப்பு நிச்சயம் நடக்குமா?

நீங்கள் காலத்தை வென்று விட்டீர்கள்.. அதனாலேதான் அவ்வளவு நிச்சயமா நாளைக்கு வரச்சொல்லியிருக்கிறீர்கள்.

இது எவ்வளவு பெரிய விஷயம்? நேரமாயிட்டுது. நான் ஊருக்குள்ள போய் உடனே எல்லோருக்கும் இதை சொல்லி விட வேண்டும். தாமதிக்க முடியாது. ஏன் என்றால். இந்த நேரம் போய்விட்டால் அடுத்த நாளிதை எனக்கு கிடைக்கும் என்பது நிச்சயமில்லை." என்றான் பீமன்.

உடனே தருமர் சொன்னார்... "தம்பி.. கொஞ்சம் பொறு-நான் தவறு செய்து விட்டேன். பரிபூரண சுதந்திரம் பெற்றமனிதன் தான் அப்படிப் பேசமுடியும். அப்படி வாக்குறுதி தரமுடியும்.

அந்தப் பிச்சைக்காரனை இப்போதே கூப்பிடு. ஏதாவது உடனே கொடுத்து அனுப்பி வவைக்கிறேன். நாளைக்கு என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்?" என்றார்.

இதிலேயிருந்து நாம் என்ன தெதரிந்து கொள் வேண்டும் என்றால் நிகழ்காலம் தான் நமது கையிலே இருககிறது. அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நமது பொறுப்பு.

ஒரு ஊரிலே ஒரு ஜோதிடர் இருந்தார். அவர் எதிர் காலத்தைப் பத்தியே அதிகமா சொல்லிக் கொண்டே இருந்தார். அவர் ஜோசியத்தைப் பொய்யாக்கி விட வேண்டும் என்று இரண்டு இளைஞர்கள் தீர்மானம் செய்தார்கள். அதற்காக ஒரு திட்டம் போட்டார்கள்.

அது குளிர்காலம். ஒரு இளைஞன் பெரிய கோட்டு ஒன்றை சட்டைக்கு மேலே போட்டுக் கொண்டான். அந்த மேல் கோட்டுக்குள்ளே, ஒரு புறாவை மறைச்சு வைத்துக் கொண்டான். இரண்டு பேரும் அந்த ஜோசியர் வீட்டுக்குப் போனார்கள். அவரைப் பார்த்தார்கள்.

"இதோ பாருங்கள்.. இந்தக் கோட்டுக்குள்ளே ஒரு புறாவை மறைச்சு வைத்திருக்கின்றோம்.

அந்தப் புறா இப்ப உயிரோடு இருக்கா... இறந்து போய்விட்டதா என்று இதை நீங்க சொல்ல வேண்டும்.

சொல்லிவிட்டா உங்க ஜோசியத்தை நம்புகின்றோம் என்றார்கள்.

இவர்கள் மனதிற்குள்ளே என்ன திட்டம்- என்றால் புறா உயிரோடு இருக்கிறது என்று சொல்லி விட்டார் என்றால் அப்படியே கையாலே அமுக்கிக் கொன்று விடுவது.

செத்து விட்டது என்று சொன்னால் அப்படியே உயிரோடு எடுத்துக் காட்டுவது.

இதுதான் அவங்க திட்டம். அவர் என்ன பதில் சொன்னாலும் அவர் சொல்றதை பொய் என்று நிரூபித்து விடலாம் என்பது அவர்கள் நம்பிக்கை. இந்த ஜோசியர் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது என்று நம்பினார்கள்.

ஆனால் அந்த ஜோசியர் சொன்ன பதில் அந்த இளைஞர்களைத் திகைக்க வைத்துவிட்டது.

அவரு என்ன சொன்னார் தெரியுமா?

"உங்க கோட்டுக்குள்ளே இருக்கிற புறா உயிரோட இருக்கா செத்துப் போச்சா என்று தானே கேக்கிறீங்க? அது உங்க கையிலே இருக்கு.... அது சாகவும் இல்லை. உயிரோடும் இல்லை. அதோட வாழ்வும் சாவும் உங்க கையிலே தான் இருக்கு!" என்றார்.

இந்த இளைஞர்கள் தோல்வியை ஒத்துக் கொண்டு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய் விட்டார்கள்.

அதனாலே நம்ம வாழ்க்கை என்பது நமது கையிலேதான் இருக்கு. நாம் நல்லா இருக்கிறதற்கும் அப்படி இல்லாமல் போறதற்கும் காரணம் நாம் தான்.இதைப் புரிந்து கொண்டு ஒவ்வொரு விநாடியையும் அனுபவித்து வாழப்பழக வேண்டும்.

ஒரு வைத்தியசாலைக் கட்டிலிலே இருந்த நோயாளி சொன்னார்.

"டாக்டர். என்னுடைய வாழ்வும் சாவும் உங்களது கையிலே தான் இருக்கு... ஏன் என்றால் இப்ப எனக்கு ஆப்ரேஷன் செய்யப் போவது நீங்கள் தான் என்றான்.

"பயப்படாதீங்க.... எல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்!" என்றார் அந்த டாக்டர்.

"அதுக்கில்லை டாக்டர்... இதுவரைக்கும் நான் ைத்தியசாலைப் பக்கமே வைத்தியத்துக்கு என்று வந்ததில்லை. இதுதான் எனக்கு முதல் ஆப்ரேஷன்... அதுதான் பயமா இருக்கு! என்றார் அவர்.

அதுக்கு அந்த டாக்டர், எனக்கும் தான் இது முதல் ஆபரேசன் அதற்காக நான் என்ன பயப்படுகிறேனா பாருங்கள் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனிதப் பேரவலத்தின் அடையாளமே

# செம்மணி மனிதப் புதைகுழி!

## சோமரத்ன வெளியிடும் விடயங்கள் பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் - சிறீதரன் எம்.பி



**(யாழ்ப்பாணம்)**

**செம்மணி மனிதப் புதைக்குழி மற்றும் ஏனைய மனிதப் புதைகுழிகள் குறித்து மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ஷ குறிப்பிடும் விடயங்களை ஆராய்ந்தால் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள், உயர் அதிகாரிகளை கைது செய்ய நேரிடும் என்ற அச்சத்தில் அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுக்காமல் வெளிப்படுத்தல்களை பொருட்படுத்தாமல் இருக்கிறது என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் -சித்துப்பாத்தி இந்து மயானம் என்பது தமிழ் மக்களின் எலும்புகள் விதைக்கப்பட்டுள்ள, இனப்படுகொலையின் வாயிலாகவே இன்று உலகுக்கு அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இந்தப் பகுதியில் பெருமளவிலான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள் என்பதை மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ஷ கைது செய்யப்பட்ட காலப்பகுதியில் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் செம்மணிச் சந்தியில் உள்ள கோயிலுக்கு முன்புறத்திலும், நல்லூருக்குச் செல்லும் பாதையிலும் மனித உடல்கள் புதைக்கப்பட்டதாகவும் இராணுவத்தால் அவர்கள் கொலை செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆகவே இது மறைக்கப்படக்கூடியதொரு விடயமல்ல.

உண்மையும், நேர்மையுமான வகையில் இந்த விடயம் ஆராயப்பட வேண்டும். சோமரத்ன குறிப்பிட்ட தற்கமைய செம்மணி பகுதியில் இருந்து இதுவரை 400 இற்கும் அதிகமான மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அதனைக் காட்டிலும் மேலும் 200 இற்கும் அதிகமான எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்படும் சூழல் காணப்படுகின்றன.

கொப்பேகடுவ இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய பகுதிகளில் இருந்த இளைஞர்கள் அழைத்து வரப்பட்டு மண்டைத்தீவு தோமையார் தேவாலயத்துக்கு முன்பாக இருந்த கிணற்றிலும், மண்டைதீவு செம்பாட்டித் தோட்ட கிணற்றிலும் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார்கள். அவர்களின் தாய், தந்தையர் மற்றும் சகோதரர்கள் இன்னும் வாழ்கிறார்கள். ஆகவே அந்த புதைகுழிகளும் அகழப்பட வேண்டும்.

கொக்குத்தொடுவாய் பகுதியில் மிக மோசமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். வாய்கள் பிளந்தவாறு, எலும்புகள் முறிக்கப்பட்ட நிலையில் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது மிகவும் பயங்கரமானதொரு செயற்பாடு.

உலகில் மனித குலத்துக்கு எதிராக நிகழ்ந்த மோசமான மனிதப்படுகொலை இதுவாகும். இந்த எலும்புக்கூடுகளும், அதனுடனான உண்மையும் உலகுக்கு காட்சிப்படுத்தப்பட வேண்டும். காலவோட்டத்தில் உண்மைகள் மறைக்கப்படக்கூடாது. யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டு, அழிக்கப்பட்டது. அந்த சம்பவத்தின் உண்மை அவ்வாறே மூடி மறைக்கப்பட்டு, புதிய நூலகம் அமைக்கப்பட்டது. ஆனால் உண்மை இறுதி வரையில் வெளிப்படுத்தப்படவில்லை. இது நாம் விட்ட தவறாகும். ஆகவே, செம்மணியில் மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும். எதிர்கால தலைமுறையினர் உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 13 1/4<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L, Bussiness<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: B/17007 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>10 இல் சூரி செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC(IT)<br>எதிர்பார்ப்பு: படித்த தகுதியான ஆண்<br>தொ.இ: G/17026 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 22<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L, Security<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17009 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'6"<br>கி.பா: 28<br>தகைமை/தொழில்: BA, Canada<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/17027 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:BSC(QS), London<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17011 | பிறப்பு: 2001 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:36<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: BBA, Accountant<br>எதிர்பார்ப்பு: படித்த தகுதியான ஆண்<br>தொ.இ: G/17029 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>1 இல் செவ்<br>கி.பா: 53<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: BSC, Manager (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17012 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>7 இல் செவ்<br>கி.பா: 74<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDE,BEd,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ:G/17031 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 82<br>8 இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: A/L.பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17014 | பிறப்பு: 1998 RC<br>நட்சத்திரம்: சுவாதி<br>10 இல் சூரி செவ்<br>கி.பா: 49<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc, Programme Coordinator<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/17034 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# பௌத்ததுறவிகளுக்கு விசேட நீதிமன்றம்

## தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் பௌத்த துறவிகள் எதிர்கொள்ளும் ஒழுக்கநெறி மற்றும் சிவில் விவகாரங்களை கையாள்வதற்கும், அவர்களின் கௌரவத்தையும் பௌத்த சாசனத்தின் உன்னத நிலையையும் பாதுகாப்பதற்கும், பௌத்த துறவிகளுக்கென தனித்துவமான விசேட நீதிமன்ற கட்டமைப்பு உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என பலாங்கொட கஸ்ஸப்ப தேரர் வலியுறுத்தியுள்ளார்.

பொசோன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் காணொளி ஊடாக இடம்பெற்ற விசேட தர்ம போதனையின் போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் அரசியலமைப்பின்படி பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் முதன்மையான கடமையாகும் என்றும், துறவிகளின் கௌரவத்தை உறுதிப்படுத்தும் வகையில் தனியான நீதித்துறை அமைப்பு உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும் என்றும் குறிப்பிட்டார்.

முஸ்லிம் சமூகத்தின் தனிநபர் திருமணம், விவாகரத்து உள்ளிட்ட சிவில் விவகாரங்களை கையாள்வதற்காக காதி நீதிமன்றங்கள் சட்டப்பூர்வமாக இயங்கி வரும் நிலையில், அரசியலமைப்பில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள பௌத்த துறவிகளின் ஒழுக்க நெறி மற்றும் நிர்வாகச் சிக்கல்களை கையாளும் தனித்துவமான நீதிமன்றம் இதுவரை அமைக்கப்படாதது வரலாற்றுப் பிழை என அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் பல்வேறு அரசுகள் பௌத்த சாசனத்திற்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறியிருந்தாலும், துறவிகளுக்கென பிரத்தியேக நீதிமன்றங்களை சட்டரீதியாக நிறுவுவதில் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1076





அவர்களும், 'நல்ல வேளை! அபாயம் ஒன்றுமில்லை. படகு வந்ததும் அவளை எப்படியும் தப்புவிக்கலாம்!' என்று கருதினார்கள்.

“கூரையை விட்டுவிடாதே! கெட்டியாகப் பிடித்துக் கொள்!” என்று பலமாகக் கத்தினார்கள். வானதி ஜோதிடர் வீட்டுக் கூரையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தக் கூரையே அசைவது போலத் தோன்றியது. 'அடடா! வீடு இடிந்து விழுகிறதா, என்ன?' ஆம் ஜோதிடர் வீட்டுச் சுவர்கள் இடிந்து விழுந்து விட்டன. ஆனால் கூரை மட்டும் விழவில்லை! கூரை, வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கி விட்டது.

வானதி அந்தக் கூரையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மிதந்தாள். கோவில் மண்டபத்தை நோக்கித் திரும்பிப் பார்த்தாள்.

“அக்கா! நான் அவரைப் பார்க்கப் போகிறேன். பொன்னியின் செல்வரைப் பார்க்கப் போகிறேன். காவேரித்தாய் என்னை அவரிடம் கொண்டு போகிறாள்!” என்று கூவினாள்.

அவள் கூறியது அவர்கள் காதில் விழுந்திருக்கும். முக்கியமாகப் பூங்குழலியின் காதில் விழுந்திருக்கும், என்று மனப்பூர்வமாக நம்பினாள்.

ஜோதிடர் வீட்டுக் கூரை வெள்ளத்தில் மிதந்து சென்று கொண்டிருந்தது. வானதியும் போய்க்கொண்டிருந்தாள்.

## அத்தியாயம் - 16
## பூங்குழலி பாய்ந்தாள்!

சோழ நாட்டில் பிரயாணம் செய்துள்ளவர்கள் அந்நாட்டின் இயற்கை அமைப்பில் ஒரு விசித்திரத்தைக் கவனித்திருப்பார்கள். சோழ நாட்டைச் சோறுடை வள நாடாகச் செய்யும் நதிகளில் வெள்ளம் வரும்போது, வெள்ளத்தின் மேல் மட்டம் நதிக்கு இருபுறங்களிலுமுள்ள பூமி மட்டத்துக்கு மிக்க உயரமாயிருக்கும். இவ்விதம் இருப்பதினாலேதான் நதிகளில் வரும் வெள்ளம் வாய்க்கால்களின் வழியாக வயல்களுக்குப் பாய்வது சாத்தியமாகின்றது.

இந்த நிலையில் வெள்ளத்தை நதிப் படுகையோடு போகச் செய்வதென்பது மிகவும் சிரமமான காரியம் அல்லவா? நதிகளுக்கு இருபக்கங்களிலும் உயரமான கரைகள் உறுதியாக அமைந்திருக்க வேண்டும். இல்லாவிடில், வெள்ளம் நதியோடு போவதற்குப் பதிலாக, மழைநீர் நாலாபுறமும் பாய்ந்து ஓடுவதுபோல் ஓடிச் சோழ நாட்டைத் தண்ணீர் தேங்கிய சதுப்பு நிலமாக்கி ஒன்றுக்கும் பயனற்றதாகச் செய்துவிடும்.

இதை முன்னிட்டு ஆதி காலத்திலிருந்து சோழமன்னர்கள் காவேரிக்கும், காவேரியின் கிளை நதிகளுக்கும் கரைகள் அமைப்பதில் மிக்க கவனம் செலுத்தினார்கள். கரிகால் வளவன் ஈழ நாட்டிலிருந்து யுத்தத்தில் தோற்றவர்களைச் சிறைப்படுத்தி வந்து, காவேரிக்குக் கரையெடுக்கும் வேலையில் அவர்களை ஈடுபடுத்தினான் என்னும் வரலாற்றை வாசகர்கள் அறிந்திருப்பார்கள்.


காவேரியின் கிளை நதிகளில் தண்ணீர் நல்ல மேல் மட்டத்தில் வருவதற்கு உதவியாகவே ஸ்ரீரங்கத்துக்கு ஒரு காத தூரம் கிழக்கே சோழ மன்னர்கள் கல்லணை கட்டினார்கள். அந்த அணையின் மூலம் தண்ணீர் மட்டம் மேலும் உயர்ந்து கிளை நதிகளில் நிறையத் தண்ணீர் பாய்வது சாத்தியமாயிற்று.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்னப்பறவைகளும் வாத்துக்கூட்டமும்



(நேற்றைய தொடர்ச்சி)

சமயங்களில் படித்துறையில் அமர்ந்து தடாக நீரினைக் கைகளால் அளைந்தபடி அன்னங்களிடம் பேசுவார். அன்றைக்கும் அவர் அன்னங்களிடம் பேச்சுக் கொடுத்தார்.

அப்போது அன்னப் பறவைகள் துறவியிடம் “இந்த வாத்துகளை வேறு எங்காவது போய் வாழச் சொல்லுங்க! இவர்களை எங்களுக்குப் பிடிக்கவில்லை!'- என்றன. “எதனால் இப்படிச் சொல்கிறீங்க?” என்று துறவி கேட்டார்.

“இவை ரொம்ப சோம்பலாக இருக்கின்றன! தடாகத்தை அழுக்கு செய்கின்றன! கத்தி கூப்பாடு போடுகின்றன!” என்று அன்னங்கள் கூறின. துறவி அன்னங்களின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

“இந்தத் தடாகத்துக்கு அருவியில் இருந்துதான் தண்ணீர் வருகிறது! அதனால் தினமும் தண்ணீர் புதுசாமாறிக் கொண்டேதான் இருக்கு! வாத்துக் கூட்டத்தால் தடாகம் அழுக்காகும் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது!”- என்றார் துறவி. “வானத்தை பார்த்து அண்ணாந்தபடி கூட்டமாக கத்துவது வாத்துகளோட இயல்பு! அதை நீங்க வெறுக்கக் கூடாது! இரசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்! என்றார் துறவி. அவரே தொடர்ந்து “வாத்துகள் இங்கேதான் இருக்கும்! அவை வேற எங்கேயும் போகாது! இந்தத் தடாகம் அவைகளுக்கும் சொந்தமானதுதான்!” என்று உறுதிபட சொன்னார். வேறு வழியின்றி அன்னங்கள் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டன.

ஒருநாள் அன்னப்பறவைகள் படித்துறையில் விளையாடிக் கொண்டிருந்தன. வேடன் ஒருவன் அருகே புதரில் மறைந்திருந்தான். அவன் அன்னங்களைப் பிடிக்க தண்ணீருக்குள் வலை விரித்திருந்தான். அன்னங்களுக்கு இது தெரியாது.

விளையாடி முடித்துவிட்டு அவைகள் தடாகத்தில் இறங்கிய போது வலையில் சிக்கிக் கொண்டன. வேடன் அன்னப்பறவைகளோடு வலையைச் சுருட்டிக் கொண்டு கிளம்பினான். அன்னங்கள் பிடிபட்டதைப் பார்த்த வாத்துக்கள் பதைபதைத்தன. அவைகள் அன்னப்பறவைகளைக் காப்பாற்ற முற்பட்டன.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.
~ திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.மறை மாவட்டத்தின் புதிய ஆயருக்கு ஓர் அன்பு மடல்

யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் புதிய ஆயராக பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் பிள்ளை நாயகம் அவர்கள் நேற்று முன்தினம் புனித பாப்பரசரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஆயருக்கு எமது வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோன்று இதுகாறும் யாழ்.மறை மாவட்டத்தின் ஆயராக இருந்து பெரும்பணியாற்றி ஓய்வு பெறும் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்.மறை மாவட்டத்தின் ஆயராகப் பதவியேற்றுள்ள அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை அவர்களின் இறையியல் பணிகள் கொழும்பை மையமாகக் கொண்டிருந்தாலும் அவரின் பிறந்த மண் யாழ்ப்பாணமாகவும் அவரின் பட்டப் படிப்புகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக இருப்பதனாலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் சமகால நிலைமைகளை தாங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள் என்பதில் எந்த ஐயமும் இருக்க நியாயமில்லை.

அதேவேளை எங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் "சமயம்" என்பது ஒருபோதும் பிரச்சினைக்குரியதாக இருக்கவில்லை.

மாறாக, சைவசமயத் தலைவர்களும் கத்தோலிக்க மதத் தலைமைகளும் எப்போதும் ஒற்றுமையுடன் பயணித்துள்ளதை இவ்விடத்தில் நினைவுபடுத்துவது மிகவும் முக்கியமானது.

அதிலும் தேகவியோகமடைந்த நல்லை ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம், யாழ்.மறை மாவட்ட ஆயர்களுடன் மிகவும் அந்நியோன்னியமான நட்புறவைப் பேணியிருந்தார்.

அதுபோல யாழ்ப்பாண ஆயர்களும் நல்லை ஆதீன சுவாமிகள் மீது மிகுந்த மதிப்புக் கொண்டிருந்தனர். உண்மையில் இத்தகைய சமய சமரச உறவு நிலை எங்கள் தமிழினத்தின் ஒற்றுமைக்கு மிகவும் அவசியமானதாகும்.

இதை நாம் இங்கு கூறும் போது, மன்னாரில் இந்த நிலைமை இல்லாது போனமை மிகவும் வேதனைக்குரியதாகும்.

ஆம், மன்னாரில் சைவமக்களை இரண்டாந்தரத்திற்கு நகர்த்துவதில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இல்லம் சார்ந்த ஒரு பகுதி குருமார் அதி தீவிரமாகச் செயற்படுகின்றனர்.

இதனால் அங்குள்ள சைவமக்கள் மனம் நொந்துள்ளனர்.

அதிலும் குறிப்பாக திருக்கேதீச்சர ஆலய நுழைவுவாயில் வளைவை தள்ளி விழுத்தி நந்திக் கொடிகளை சப்பாத்துக் கால்களால் உழக்கிய கொடும் செயலைச் செய்தவர்கள் சில பாதிரிமார் என்பது சகிக்க முடியாத உண்மை.

இங்கு தான் யாழ்ப்பாணம், சமய ஒற்றுமையில் உச்சம் தொட்டு சமய சமரசத்தின் அவசியத்தை ஏனைய மாவட்டங்களுக்கு வலியுறுத்துவதுடன் அவற்றுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

இந்த நிலைமை தங்களின் காலத்தில் இன்னமும் மேலோங்கி, தமிழ் பண்பாட்டை – தமிழ்க் கலாசாரத்தை தமிழின் பேரால் அனைத்துத் தமிழர்களும் பின்பற்ற வகை செய்ய வேண்டும்.

இந்த உன்னதமான தமிழ்ப்பற்று தங்களின் காலத்தில் மென்மேலும் உயர்வடைய வேண்டும் என்பதே தங்களிடம் நாம் முன்வைக்கின்ற தாழ்மையான கோரிக்கையாகும்.

# வடக்கில் போதைக்கு அடிமையான சிறுவர்களுக்கு புனர்வாழ்வு மையம் இல்லை

## அமைச்சர் சாவித்திரி போல்ராஜிடம் அதிகாரிகள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் போதைக்கு அடிமையான சிறுவர்களுக்கெனப் பிரத்தியேகப் புனர்வாழ்வு மையம் இல்லை என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் அவர்களிடம் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடல்,ஆளுநர் செயலகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் களமட்டத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் அவர்கள் அமைச்சருக்கு விரிவாக விளக்கமளித்தார். குறிப்பாக சிறுவர் பராமரிப்புத் தொடர்பில் காணப்படும் சட்ட ஏற்பாடுகளின் போதாமைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

போதைப்பொருளுக்கு அடிமையான சிறுவர்களுக்கென பிரத்தியேகப் புனர்வாழ்வு மையம் வடக்கு மாகாணத்தில் இல்லாமையால் அவர்களைச் சான்றுபெற்ற பாடசாலைகளில் இணைக்கும்போது பலவேறு நடைமுறைச் சிக்கல்கள் எழுவதாக அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன் உளநலத் தேவைப்பாடுடைய சிறுவர்களைப் பராமரிப்பதற்கென அரச சிறுவர் இல்லங்கள் இன்மையால் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்தும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், கைவிடப்பட்ட சிறுவர்களை அரவணைத்து வளர்த்தெடுக்கும் இப்பணியானது வெறும் தொழில் அல்ல. அது ஒரு மாபெரும் சமூகச் சேவை என்ற உணர்வோடு முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

சட்டரீதியான திருத்தங்கள் தேவைப்படும் விடயங்கள் தொடர்பில், 9 மாகாணங்களும் ஒன்றிணைந்து ஆவண ரீதியாக முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறும் அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதுகாலவரையில் வடக்கு மாகாண உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான வாய்ப்புகள் போதியளவு வழங்கப்படாமை குறித்துக் கவலை வெளியிட்ட அவர், இனிவரும் காலங்களில் இவர்களுக்கும் அத்தகைய பயிற்சிகளுக்கான வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கான போதைப்பொருள் புனர்வாழ்வு மையம் மற்றும் உளநலத் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என உறுதியளித்தார். (ம-7)

## போதைப்பொருள் வழக்கில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு அநுராதபுரம் மாகாண மேல் நீதிமன்றம் நேற்று (30) ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர் கெக்கிராவை வீதி, தலாவப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபராவார்.

குறித்த வழக்கானது நான்கு வருடங்களுக்கும் மேலாக அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த நிலையில் முறைப்பாட்டாளரால் சந்தேகத்திற்கு இடமின்றி குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதை அடுத்தே குற்றவாளிக்கு இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## முன்னாள் எம்.பி மஜீத் நேற்றுக் காலமானார்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பி. மஜீத் என்றழைக்கப்படும் மீராசாஹிபு அப்துல் மஜீத் நேற்று (30) காலமானார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த மூத்த தலைவர்களில் ஒருவராக எஸ்.எஸ்.பி. மஜீத் அறியப்படுகின்றார்.

ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவும் இலங்கையின் தேசிய ரக்பி அணியின் தலைவராகவும் அவர் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சொத்து விபரங்களை சமர்ப்பிக்க அரச அதிகாரிகளுக்கு கூடுதல் கால அவகாசம்

அரச அதிகாரிகள் தங்களது சொத்து மற்றும் பொறுப்பு விபரப் பிரகடனங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர் வரும் ஜூலை மாதம் 07ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக குறித்த காலப்பகுதிக்குள் பதிவுகளை முடிக்க முடியாத அதிகாரிகளின் நலனைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நீடிக்கப்பட்ட காலப்பகுதியில் பிரகடனங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் எந்தவொரு தாமதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்றும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## மோ.சைக்கிள்களுடன் வர்த்தகர் ஒருவர் கைது

இலங்கையில் பதிவு செய்யப்பட முடியாத அதி நவீன ரக அதிவேக மோட்டார் சைக்கிள்கள் ஐந்துடன் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகம பொலிஸ் குற்றவியல் பணியகத்தின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில், அத்துருகிரிய - ஹோகந்தர பகுதியில் பொலிஸார் திடீர் சோதனையொன்றை மேற்கொண்ட நிலையில் குறித்த மோட்டார் சைக்கிள்கள் இனங்காணப்பட்டன.

விசாரணைகளில் குறித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் பெறுமதி ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகம் என்றும் தெரியவந்துள்ளது. இதனுடன் இரண்டு போலி இலக்கத் தகடுகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து ஹோகந்தரப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய வர்த்தகர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக அத்துருகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடமாகாண அபிவிருத்தி உலக பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்களை அடையுமா?

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நாமிருவர் நம்மில் பன்னிருவர் என இருந்த மனையில் நாமிருவர் நம்மில் ஐவராகி கடைசியில் நாமிருவர் நமக்கிருவர் என்றாகி தற்போது நாமிருவர் நாமேயிருவர் என்றாகிவிட்டது காணீர். இந்த குடும்ப எண்ணிக்கை குறைந்ததற்கு பலகாரணங்களை முன் வைத்தாலும் முன்னைய காலங்களில் இருந்த உணவுப் பழக்கமும் அதனால் அவர்கள் பெற்ற ஊட்டச்சத்தும் அவர்களது தேகாரோக்கியத்தை பேணிப் பாதுகாத்தது என்றே சொல்லலாம். தற்போதைய அவசர உலகத்தில் விரைந்து உணவுக்கு எம்மை நாமே தயாராக்கிக் கொண்டோம் என்பதும் நகர்ப்புறத்தில் அலைமோதும் விரைவுணவுகளின் விலைகளையும் கடைகளையும் கணக்கிட்டால் நாம் நவநாகரீக மோகத்துள் சுழன்று கிராமப்புறம் வேண்டாம் என்னும் நிலைக்கே எம்மவர்களை குறிப்பாக இளையவர்களை கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கின்றது.

என்ன தான் செய்தாலும் விவசாயம் கிராமப் புறத்திலே என்பதும் அங்கிருந்து தான் அனைவருக்கும் உணவு உற்பத்தியாக வேண்டும் என்பதும் நிதர்சனம். கொடும் வெயிலில் விவசாயஞ் செய்து அதனை விற்க முடியாமல் தவிக்கும் விவசாயிகள் அல்லல்படுவதை கண்ணால் கண்டும் நாம் வாளாவெட்டிகளாகவே இருக்கின்றோம். தினம் தினம் ஒவ்வொரு மரக்கறி விலையுயர்ந்து வானுயர்ந்து நிற்கின்றது. வடபகுதியில் தக்காளி தட்டுப்பாடாகி தென்பகுதியிலிருந்து வந்து சுப்பர் மார்க்கட்களிலும் ஆயிரம் ரூபாவாகிவிட்டது.

இயற்கையின் சீற்றம் அதனையும் மிஞ்சியதாகவே இருக்கின்றது. எல் நினா என்னும் வெப்ப அலை மாறி லா நினா என்னும் அதியுயர் வெப்பக் காற்று வீசியடிக்க தொடங்கியதிலிருந்து பலநாடுகளில் காப்பெற் தார்கள் இளகி வாகன ரயர்கள் உருகி பாரிய அனர்த்தம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இதுபோன்றதொரு நிகழ்வு எங்களூரிலும் நடந்து விடுமோ என்னுமளவிற்கு வெப்பநிலை அதிகரித்து சுட்டெரிக்கின்றது. அந்தளவிற்கு வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து விட்டது. நகர பெருந்தோட்ட அபிவிருத்தி என்னும் போர்வையில் இயற்கையாக வானுயர்ந்து நின்ற மரங்களெல்லாம் அகற்றப்பட்டுவிட்டன. நடுவதற்கு விருப்பப்படாத மனது இயந்திரமுள்ளு வாள் கொண்டு அறுத்து சரித்த நிழல் அனைத்தும் வெளிச்சமாகவே வந்துவிட்டது. நிழல் என்பது மருந்துக்கும் இல்லை. அந்தந்த விருட்சங்களில் வாழ்ந்த எங்களூர் பறவைகள் மிருகங்கள் தமக்கான குடிலுக்கான மரந்தேடி சென்றுவிட்டன. இந்த செயற்கையான அபிவிருத்தியில் எங்களூரின் சூழல் தொகுதி வெகுவாகவே மாற்றமடைந்து விட்டது. பாதை செப்பனிடப்பட்டுவிட்டது ஓர் நற்செய்திதான். அதனால் தான் விரைவுப் பயணம் சாத்தியமானது. விரைந்து ஓடிக்கொண்டிருக்கின்றோம் எங்கு என்பது தான் இன்னமும் தெரியவில்லை. உலக பேண்தகு அபிவிருத்தி இலக்கு 2030 ஆண்டு என வரையறுக்கப்பட்டு விட்டது. தற்போது 2026 இல் ஓடிக்கொண்டிருக்கின்றோம். சென்ற அரசாங்கங்கள் ஏற்படுத்திவிட்ட பொருளாதாரச் சுமையை தாங்கமுடியாது நம்நாடு இந்தியப் பெருங்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. திறைசேரி தன்னை நிரப்புவதற்கு நிறையவே பிரயத்தனம் பண்ணவேண்டியதாயிற்று. நிதி வளம் இன்றி அபிவிருத்தி எப்படி சாத்தியம். வடமாகாணத்தின் அந்நிய செலவாணி சுட்டெண் 4.2 ஆகவே இருக்கின்றது. ஆனால் மேல்மாகாணம் 40 புள்ளியை தாண்டி நிற்கின்றது. எமது பிரதேசத்தின் சுட்டியை 10 ஆக நகர்த்துவதற்கு வடமாகாண செயலணியினால் திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறையிலிருக்கின்றன. ஆனால் அது எதிர்பார்த்த நகர்வை அடைவதற்கு பல தடைகளும் முட்டுக் கட்டைகளும். பஞ்சம் பட்டினி உணவின்மை ஆகியன உலகளாவிய பேண் அபிவிருத்தி இலக்குகள் 1 ஆம் 2 ஆம் ஆக இருந்தும் எமது மக்களை இன்னமும் உணவின்மையிலிருந்து முழுமையாக காப்பாற்ற முடியவில்லை. உணவுப் பாதுகாப்பும் ஊட்டச்சத்து பாதுகாப்பும் இன்னமும் முழுமை பெறாத நிலை




யிலிருக்கின்றது.

சனத்தொகை பெருகிவிட்டதென்பது உலகளாவியளவில் உண்மையாகினும் வடமாகாணத்தைப் பொறுத்தளவில் குடும்பமொன்றுக்கு ஒருவர் இருவர் பிள்ளைகளாக குடும்பம் சிறுத்து விட்டது. வாழ்க்கைச் செலவு அதிகரித்ததும், பொருளாதார சுமை அனைவரிலும் உள்ளிறங்கியதாலும் என நாம் நம்பிக் கொண்டாலும் அதிலும் உண்மையில்லாமலில்லை. தனிமனித ஊதியம் வெகுவாக கரைவது தெரிகின்றது. குடும்ப வருமானம் வரவினை மீறிய செலவாகிவிடுகின்றது. ஆகக்கூடிய 5000 ரூபா நாணயத்தாளுக்கே மதிப்பில்லாமலே போய்விட்டது. சமகால செலவுக்கான ஊதியத்தை பெற முடியவில்லை என்னும் ஆதங்கம் பலரிடம் குறிப்பாக இளையவர்களிடம் எழுந்துள்ளமை மிகவும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டியதொன்றாகும். இதனால் பலரும் தம்மையறியாமலேயே தவறிழைக்க உட்படுவதும் இலகுவான தொழிலின் மூலம் அதிக ஊதியம் பெற முயல்கின்றமையும் தெரிகின்றது. இவையெல்லாமே சமகாலத்தில் பலர் வயது வேறுபாடின்றி தவறிழைக்கவும் துணிகின்றனர். வெறுமனே ஊடகங்களில் பதிவிட்டு "யூரியுப்பில்" அவரவர் உழைத்துக் கொள்வதை விடுத்து இவ்வாறான மக்களை தவறுசெய்யாதிருக்கும் வழிவகைகளை கண்டறிந்து அவர்கள் திருந்தி வாழ வழிசெய்து கொடுக்க வேண்டும்.

ஆனால் நாம் வடமாகாண அபிவிருத்தியை உலகளவின் விரைவுப் போக்குக்கு உயர்த்த வேண்டும் என்னும் நினைப்பில் பல்வேறு திட்டங்களை புனைந்து நடாத்த முற்படுகின்றோம். பல்லாண்டுகளாக எடுக்கப்பட்ட இவ்வாறான போக்கு இன்னும் மாற்றமடையாது அப்படியே இருக்கின்றது. எமது வளம் முக்கிய வளம் பனை அதற்கு உலக தினம் கொண்டாடுகின்றோம். வரவேற்கின்றோம். ஆனால் அதிலிருந்து உலக சந்தைக்கு சிறந்த ஆதாரத்தைத் தரும் உற்பத்திகளை கொண்டு செல்ல முடியவில்லை. எமது வளத்தை பெருக்கிக்கொண்டால் நிச்சயமாக ஒரு நாள் எமக்கு அதுவே சுயசார்ப்பு பொருளாதாரத்திற்கான அடித்தளமுமாகியிருக்கும். எவ்வளவு செய்தும் மாற்ற முடியவில்லையே. மாறுவதும் தெரியவில்லையே.

உலகளவிலான பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 17 இனையும் நாம் செவ்வனே 2030 இற்குள் செய்து முடிக்க முடியாது போய்விடும் என்பதனை நாம் ஊகிக்கலாம். எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மேல் நோக்கிய நகர்விலேயே இவை அனைத்தும் சாத்தியமாகலாம். ஆனால் தற்சமயம் இயற்கையின் சீற்றம் அதிக வெப்பத்தை உலக நாடுகள் தாங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுவிடும். இதனது தாக்கம் அளப்பரியது.

வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டம் தனது ஆளுமையின் கீழ் அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கான வழிவகைகள் அதிகமுண்டு. இம்மாவட்டம் முன்பிருந்த தற்சார்பு நிலையிலிருந்து ஒருங்கிணைந்த மதிப்பேற்றஞ் செய்த விவசாயஞ் சார் தொழிற்சாலைகளை உள்வாங்கினால் சாத்தியமாகும். இதில் முக்கிய வழிமுறைகளாக விவசாயத்தையும் மீன்பிடியையும் முனைப்புள்ள தொழிற்றுறையாக மாற்றுதல் போக்குவரத்து வசதிகளுக்கான முகாமைத்துவத்தை மேலுயர்த்தல், புதுப்பிக்கத்தக்க வலுவை விரிவாக்குதல், மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையை உள்ளீர்த்தல் இவற்றுடன் வடமாகாணத்து சுற்றுலாத்துறையை மேம்படுத்தலாகும்.

**அதிமுக்கிய பொருளாதார மேம்பாட்டு புள்ளிகளாக:**

- **விவசாய- விளைபொருள் மேம்படுத்தல் மற்றும் மதிப்பேற்றல்** - விளை நிலத்திலிருந்து விளை பொருளை பதனிட்டு, நீரகற்றி பொதி செய்து விளை பொருட்களின் ஏற்றுமதி விலையை அதிகரித்தல். இதற்காக குளிர் களஞ்சியங்கள் மற்றும் விளை பொருட்களை சேகரிக்கும் சங்கிலித் தொடர் என்பன முதலீடுசெய்யப்படல் வேண்டும். ஒரு காலத்தில் (1980 களில் கிளிநொச்சி மாவட்டத்திலிந்து வண்டி வண்டியாக வாழைக்குலைகள் தம்புள்ள சந்தைக்கு ஏற்றப்பட்டதை இதில் நினைவு கூறலாம். நடைபெற்ற போரினால் அந்த வளங்கள் சீர்குலைந்தாலும் அவற்றி னை நாம் மீள கட்டமைக்க முடியும்.)
- **மீன்பிடி மற்றும் நீருடக வளர்ப்பு அபிவிருத்தி** - ஆழ்கடல் மீன்பிடியை விரிவாக்குவதுடன் கிளிநொச்சி மாவட்ட கரையோர மீன்வளங்கள்ள பாதுகாத்து நீண்டகால பயன்பாட்டுக்காக வழிசெய்தல். இதற்காக நவீனமயமாக்கப்பட்ட இறங்கு துறை, நங்கூரமிடுதல், மீன்பிடி குடும்பங்களுக்கு மீன்பிடிசார் வர்த்தக பயிற்சிகள் வழங்கப்படுதல்
- **சிறிய மற்றும்நடுத்தர தொழிற்றிறனை விருத்தி செய்தலும் அவற்றினது வளர்ச்சியும்** - பெண்களை தலைமைத்துவமாக கொண்ட தொழிற்றிறன் விருத்தியினை மேம்படுத்தலும் உள்ளூர் கூட்டுறவுச் சபைகள் மீளமைத்தல்.
- **போக்குவரத்தினை வர்த்தக மேம்பாட்டுக்கு இலகுவாக்கல் மற்றும் சந்தைகளை இணைத்தல்** - வடமாகாண போக்குவரத்தினை இன்னும் வினைத்திறனாக பயன்படுத்தும் நிலைக்கு நாம் வரவேண்டும். வடமாகாண ரயில்வே வளத்தை பயன்படுத்துதல் மற்றும் இங்குள்ள படிப்பறிவற்ற படிப்பு குறைந்த அனைத்து தரப்பினரையும் வேலை பெறுவதற்காக தயார்ப்படுத்துதல் அவசியம்.
- **மீள்புதுப்பிக்கத்தக்க வலு மற்றும் அவற்றின் பன்முக பயன்பாட்டை அதிகரித்தல்** - கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்புதுப்பிக்கத்தக்க வலுவை பெறுவதற்கான வழிவகைகளுக்கு சிறந்த திட்டமிடலும் முதலீடும் மிக அவசியமாகும். இங்குள்ள காலநிலையை துல்லியமாக அளவிட்டு அதன் மூலம் சூரிய ஒளியை சிறப்பாக பயன்படுத்தி மீள்புதுப்பிக்கத்தக்க வலு கட்டமைப்பை உருவாக்குதல் வேண்டும்.
- எமது நாட்டிலிருந்து புலம் பெயர்ந்த மக்களை இங்கு வரவழைத்து அவர்களை முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டும். புலம் பெயர்ந்தவர்களிடமிருந்து நிதிப்பங்களிப்பை பெற்று அவர்களை பல்வகை தொழிற்றுறையில் முதலிடுவதை ஊக்குவிக்க வழிசெய்தல் அவசியமாகும். இவற்றுடன் தொழினுட்ப சார் வல்லுநர்களையும் புலம்பெயர் நாடுகளிலிருந்து அழைத்து எமது மக்களை அத்துறையில் ஊக்குவிக்கலாம். குறிப்பாக குளிரூட்டி மற்றும் ஏசி திருத்துதல் பணிகளுக்கு தொழிலாளர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர். பலரை இத்துறைசார்ந்து ஊக்குவிக்கலாம்.



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஏழாலையில்...

லங்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை (30) மீட்கப்பட்டுள்ளது.


இதில் அதே பகுதியைச் சேர்ந்த குருபரன் ஜெகுபரதன் (வயது-22) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேற்படி இளைஞரின் பெற்றோர், சகோதரர்கள் வெளிநாட்டில் உள்ள நிலையில் சிறிய தாயுடன் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)




















## புதிய தலைவராக...

ஹூலங்க முவவை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

அத்துடன் அதன் ஏனைய உறுப்பினர்களாக கோவிந்தசாமி, ஹர்ஷணி ரந்திலிகம, மங்கள கருணாரத்ன மற்றும் கே.ஏ.விமலேந்திரராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்குரிய நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று (30) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அவர்களிடம் கையளிக்கப்பட்டன. (ம-7)

## தெப்பம்...

பெற்றுள்ளது.

சுற்றுலா சென்ற ஐந்து பாடசாலை மாணவர்கள் அங்குள்ள வில்லுப் பகுதியில் தெப்பம் ஒன்றில் ஏறிச் சென்றபோது அந்தத் தெப்பம் கவிழ்ந்ததில் அவர்கள் நீரில் மூழ்கியுள்ளனர்.

இதில் ஒரு மாணவன் நீந்திக் கரைக்கு வந்து உயிர் தப்பியுள்ளார். ஏனைய நான்கு மாணவர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேதப் பரிசோதனைக்காகப் புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் 16 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் பண்டார நாயகபுர மற்றும் மங்களபுர பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது. (ம-7)

## திட்டங்களை...

சர்வதேச நாணய நிதிய ஆதரவு திட்டங்களை செயற்படுத்தும் ஏனைய பல நாடுகளை விட இலங்கை அதிக முன்னேற்றம் கண்டுள்ளதாக நாணய நிதியப் பிரதிநிதிகள் குழு குறிப்பிட்டது.

நேற்று (30) சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடியபோதே இந்த விடயம் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

தொடர்ச்சியான வெளிப்புற அதிர்ச்சிகளுக்கு மத்தியிலும் நுண் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணி வருவதற்கும் அதன் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் உறுதியாக இருப்பதற்கும் தூதுக்குழு அரசாங்கத்தைப் பாராட்டியது.

பல சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை உறுதியுடன் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதை ஏற்றுக்கொண்ட நிதியம், நாடு தனது பொருளாதார மீட்சியை நோக்கி நகரும்போது அரசாங்கத்திற்கு தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தது.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு தங்களது தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாக சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவினர் உறுதியளித்தனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் 07ஆவது மீளாய்வின்போது இலங்கையின் திட்டச் செயற்பாடுகள் உத்தியோகபூர்வமாக மதிப்பீடு செய்யப்படும் என்றும் தூதுக் குழுவினர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் தெரிவித்தனர்.

இத்திட்டத்தின் கீழ் இலங்கை பூர்த்தி செய்ய வேண்டிய ஏனைய பொறுப்புகள் இந்த மீளாய்வுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள வெளிப்புற சவால்களை வெல்வதற்கும் நிதி மற்றும் வெளிப்புற ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கும் மீளெழுச்சித் திறனை வலுப்படுத்துவதற்கும் அதேபோல் நீடித்த மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் சீர்திருத்த செயன்முறையின் வேகத்தைத் தொடர்ந்து பேணுவது இன்றியமையாதது என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ம-7)

## வடக்கு மீனவர்...

நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்துகொண்டு வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடினார்.

இணையத்தின் உபதலைவர் அன்டனி ஆல்பர்ட் தலைமையில் இடம்பெற்ற இணையத்தின் இந்த விசேட கலந்துரையாடலில் அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது,

சட்டவிரோத மீன்பிடி, இழுவை மடி தொழில், கரைவலை மீன்பிடி உள்ளிட்ட விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டமூலங்கள் நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கிருந்து பெறப்பட்ட திருத்தங்கள் மீளாய்வு செய்யப்பட்டு மீண்டும் அனுப்பப்பட்டுள்ளதுடன் இறுதி அனுமதி கிடைத்தவுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கடல் அட்டைப் பண்ணைகள் தொடர்பில் சிறு தொழிலாளர்கள் பாதிக்கப்படாத வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தை கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடலில் காணாமல்போகும் மீனவர்கள் மற்றும் படகுகள் தொடர்பிலும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருகின்றது. அவசரகால கடல் மீட்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் அதிநவீன வசதிகளைக் கொண்ட இரண்டு மீட்புப் ரெஸ்கியூ படகுகள் இவ்வருடத்திற்குள் நாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம் கடலில் அவசரநிலைகளுக்கு விரைவாக பதிலளித்து மீனவர்களின் உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும். காணாமல்போகும் படகுகளுக்கு தொழில்நுட்ப கண்காணிப்பு கருவிகளைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், இதுதொடர்பில் இலங்கைக் கடற்படையுடன் கலந்துரையாடி வருகின்றோம் என்றார். (ம-7)























Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

மலர்வு
18 - 06 - 1949



உதிர்வு
29 - 06 - 2026

## இராசலிங்கம் யோகலிங்கம்
### (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

லிங்கவாசா, கே.கே.எஸ் வீதி, இணுவிலைப் பிறப்பிடமாகவும் மாகியப் பிட்டி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் யோகலிங்கம் அவர்கள் கடந்த (29.06.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - பார்வதி தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான நாகராஜா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திராணியின் ஆருயிர்க் கணவரும் சஜீவ்(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், தெல்லிப்பழை) அவர்களின் பாசமிகு தந்தையாரும் சிவதர்ஷா(ஆசிரியை - மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) அவர்களின் அன்பு மாமனாரும் துகிராவின் பாசமிகு அப்பப்பாவும் காலஞ் சென்றவர்களான சொர்ணலிங்கம், பஞ்சலிங்கம், குணலிங்கம் மற்றும் தியாகலிங்கம், இராஜேஸ்வரி, சொர்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சோதிராஜா, காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் செல்வநாயகி, காலஞ் சென்ற இராஜலட்சுமி மற்றும் விஜயராஜா, சிவராஜா, சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2026) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (C-5958)

தகவல் : குடும்பத்தினர்
021 224 2826

# பதவி வெற்றிடம்

WEC நிறுவனத்திற்கு AS. Manager, Cashier, Administrator, Field Officer, Supervisor Clerk போன்ற வெற்றிடங்கள் உள்ளன. (2466)

- வயதெல்லை : 18 - 35 வரை
- சம்பளம் : பயிற்சியின் போது (29500 - 45000) பயிற்சியின் பின் (65000 - 125000)
- தகைமை : O/L - A/L மற்றும் G10 படித்தவருக்கும் பயிற்சிநெறியுடன் வேலைவாய்ப்பு உண்டு.

உணவு, தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு : 076 540 8344

உங்களுடைய விபரங்களை 076 740 9624 இற்கு SMS செய்யவும்.

# அலுவலக உதவியாளர் (ஆண்) தேவை

தெல்லிப்பளை பகுதியில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் (ஆண்) தேவை.

- வயது: 18 - 35, அலுவலக பணிகள், கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளும் திறன் உள்ளவர்கள்.
- தெல்லிப்பளை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசித்து, பணியிடத்தை எளிதில் அணுகக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. (2170)

தொடர்புகளுக்கு: 077 415 0683

## கொடூரமான...

பிள்ளையான் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் சிறைச்சாலை வாகனத்துக்குக் கொண்டுசெல்லப் படும்போது தன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என ஊடகவியலாளர்களைப் பார்த்துக் கூறியிருந்தமை பற்றி கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அமைச்சர் ஆனந்த விஜேபால ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதங்களைப் பயன்படுத்தி நிகழ்த்தப்பட்ட கொடூரமான படுகொலைகளின் பின்னணியில் பிள்ளையான் இருந்துள்ளார் என்பது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளில் வெளிவந்துள்ளது.

இவ்வாறான கொடூரக் கொலைகளையும் குற்றச் செயல்களையும் புரிந்துவிட்டு இன்று தான் முற்றிலும் குற்றமற்றவர் என்று அவர் கூறுவது மிகவும் வேடிக்கையானது.

அதிகார பலத்தைப் பயன்படுத்தி அவர் இத்தனைகாலம் மறைத்து வைத்திருந்த அத்தனை இரகசியங்களும் பழிவாங்கல் குற்றங்களும் இப்போது நீதிமன்றத்தின் மூலம் ஒவ்வொன்றாக அம்பலமாகத் தொடங்கியுள்ளன. சட்டத்தின் முன்னால் யாரும் தப்பிக்க முடியாது. இத்தனைகாலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் பிள்ளையான் புரிந்த குற்றங்களுக்கான தக்க தண்டனையை நீதிமன்றம் மிக விரைவில் வழங்கும் என்றார். (ம-7)

## புதிய கடற்படைத்...

அதிகாரியாக கடமையாற்றிய ரியர் அட்மிரல் டேமி யன் பெர்னாண்டோ வைஸ் அட்மிரல் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டு இலங்கைக் கடற்படையின் 27ஆவது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்குரிய நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று (30) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் ஜூலை மாதம் 01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. (ம-7)


# REECHA PAPERS (PVT) LTD

பயிற்சியாளர் (Trainees) ஆட்சேர்ப்பு அறிவிப்பு

- Machine Operator
- Pulp Mill Operator

அடிப்படைத்தகுதிகள் (2467)

- உயர்தர (G.C.E. A/L) தொழில்நுட்ப பிரிவில் (Technology Stream) 3 பாடங்களிலும் சித்தி பெற்றிருக்க வேண்டும். அல்லது தொழில்நுட்பக் கல்லூரி (Technical College) / அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தில் இயந்திரவியல் (Mechanical), வாகனப்பொறியியல் (Automobile)/ அதற்கு இணையான தொழில்நுட்பக் கற்கைநெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- 22 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- பயிற்சிக்காலத்தின் போது கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

இடம்: கைத்தொழிற்பேட்டை, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : 075 537 3472/ 021 221 3000

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5960)

076 825 7716 (ஆகாஸ்)

# மணப்பெண் தேவை

01. குப்பிழான், இந்து, 1990, கேட்டை, MPH, MHA and MBA, PHD Reading, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (46762)
02. இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Serviour, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34984)
03. காரைநகர், இந்து, 1992, சுவாதி, Bachelor of Health science (Deakin University), New zealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (49974)
04. இளவாலை, இந்து, 1994, மகம், Bsc computer Engineering (UK), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53872)
05. கோண்டாவில், இந்து, 1993, உத்தரம், Bsc, Structural Engineering, Civil Engineer, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (58653)
06. நெடுங்கேணி, இந்து, 1987, ரேவதி, Master of Engineering, Civil Engineering and Business, Medical of science at Australia, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32687)
07. மட்டுவில், இந்து, 1985, கேட்டை, B.Eng (HONS) computer Network Engineering (University of East London), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (51409)
08. கொக்குவில், இந்து, 1983, திருவோணம், Msc in Teasting Engineering, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30712)
09. கொல்லங்கலட்டி, இந்து, 1991, MSc in Economics and marketing (copenhagen university) Business, Denmark citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (52531)
10. கரவெட்டி, இந்து, 1991, பூராடம், Electric and Electronics Engineering (UK), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (35946)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-5961)

S.Sharma J.P
www.thaalee.com
076 528 4510
077 539 3728

# தேவை

- சாரதி தேவை
- மில் வேலைக்கு ஆட்கள் தேவை
- பொதியிடலுக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)

தொடர்புகளுக்கு (2469)
076 440 0816

# வேலையாட்கள் தேவை

பகுதி நேர கூலி வேலை ஆட்கள் தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும். (7950)

077 836 2408

# பல்வகைத்தன்மையே இலங்கையின் பலம்

பல மதங்கள், இனங்கள் மற்றும் கலாசாரங்களால் இலங்கை வலிமையாக உள்ளது.

வேறுபாடுகளை ஆயுதமாக மாற்றுவதன் மூலம் வெறுப்புப் பேச்சு இவ் அடித்தளத்தை அச்சுறுத்துகிறது.

எங்களைப் பிரிக்கும் கருத்துக்களை நிராகரிப்போம். மரியாதை, இணக்கம் மற்றும் ஒற்றுமையைத் தெரிவு செய்வோம். (7775)

இந்தத் தகவல் SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல. 291 [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org